
# காஞ்சி

நிறுவனர்:
அண்ணாதுரை

10-11-68

விலை 20 காசு



# கவிஞர் கோலரிட்ஜ்

கேம்பிரிட்ஜ் ஜெசஸ் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போது அவருக்கு வயது பத்தொன்பது. கல்லூரிப் பாடத்தைத் தவிர மற்றெதையும் படித்து முடிப்பதில் மன்னர்; புத்தகமும் கையுமாக இருப்பார்; பருவத்திற்கு மீறிய விளையாட்டுகள், அதனால் கைக்கு மீறிய செலவு; கடனாளி என்ற பட்டம்.

இப்படித்தான் கேம்பிரிட்ஜில் கொஞ்சநாள் இருந்தார். இந்த நாட்களில் ஒரு பெண்ணை உயிருக்குயிராக நேசித்தார். ஆனால் அது தோல்வியில் முடிந்தது. கடன் தொல்லை, காதல் தோல்வி, இவற்றினால் மனம் வெறுத்து, கேம்பிரிட்ஜிலிருந்து வெளியேறி, 'சைலாஸ் டாம்கின் காம்பெர்பெக்' என்று மாற்றுப் பெயரில் இராணுவத்தில் சேர்ந்துகொண்டார். அங்கேதான் முதன்முதலாக சில இலத்தீன் கவிதை வரிகளை எழுதினர். இப்படித்தான் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்தார்.

1772-ம் ஆண்டில் பிறந்த சாமுவெல் டேலர் கோலரிட்ஜ், பெற்றோர்க்குப் பதின்மூன்றாவது பிள்ளை; கடைப் பிள்ளை. தந்தை, டெவான்ஷையர் செயின்ட் மேரி மாதா கோயிலின் பாதிரி; அந்த ஊர்ப் பள்ளியின் தலைமையாசிரியரும்கூட!

கோலரிட்ஜின் பள்ளித் தோழர் புகழ் பெற்ற இலக்கிய ஆசிரியரான சார்லஸ் லாம்ப் என்பவர்; ஜேம்ஸ் போயர் அவருடைய ஆசிரியர்; இலக்கியவாதி! ஆசிரியரிடமிருந்த பழக்கம்தான் இவரையும் கவிதை எழுதத் தூண்டியது போலும்!

1794-ல் படையிலிருந்து விடுதலையானதும் ஆக்ஸ்போர்டுக்கு வந்தார். அங்கே—பிற்காலத்தில் அரசரவைக் கவிஞரான சதே என்பவருடன் ஒட்டிக்கொண்டார். இருவரும் இலக்கியத்தை அலசித் தீர்த்தனர். அதோடு இருவரும் ஆளுக்கொரு பெண்ணைக் காதலிக்கத் தொடங்கினர். அதில் சாரா என்பவளை கோலரிட்ஜ் 1795-ல் மணந்து கொண்டார்.

அதன்பின் மளமளவென்று தன் புகழ்பெற்ற இலக்கியப் படைப்புகளைப் படைக்க ஆரம்பித்தார். 'ரோபர் பியரின் வீழ்ச்சி' என்ற ஒரு நாடக நூல், ஒரு கவிதைத் தொகுப்பு, கிரிஸ்டபிள் என்ற கவிதை நூலின் முதல் பகுதி, குப்ளேகான், 'பழங்காலத்துக் கப்பல் மாலுமி' என்ற நீண்ட கவிதைகள், முதலியன அவர் தனித்துப் படைத்தவை. புகழ்பெற்ற கவிஞரான வோர்ட்ஸ்வொர்த்துடன் சேர்ந்து கவிதை நாடகங்கள் ஆகியவற்றையும் வெளியிட்டுள்ளார்.

இந்தச் சமயத்தில் கஞ்சா குடித்துப் பழகிக் கொண்டார். அதிகமாக அதைப் பயன்படுத்தியதால் உடல் நிலை சீர்கெடத் தொடங்கியது. தன் இலக்கியப் பணிகளை நிறுத்திவிட்டார்.

ஓய்வுக்காக ஒரு வருடம் ஜெர்மனியில் இருந்தார். நலம் பெற்ற பின் இலண்டனுக்குத் திரும்பி, 'மார்னிங் போஸ்ட்' என்றசெய்தி இதழில் பணியாற்றினர். கிறிஸ்டபிள் கவிதை நூலின் இரண்டாவது பகுதியை எழுதி முடித்தார் (இந்தக் கவிதை நூலை அவர் முடிக்கவேயில்லை) கஞ்சாப் பழக்கத்தை இன்னும் அதிதீவிரமாக்கிக் கொண்டார். உடல் நலம் முற்றிலும் கெட்டுவிட்டது. மறுபடியும் உடல் நலம்பெற மால்டா தீவுக்குப் போனர். ஓய்வில் ஷேக்ஸ்பியரைப் பற்றிச் சிறந்த மதிப்புரைகளை எழுதினர்; பல விரிவுரைகளை ஆற்றினர்.

இதற்கிடையில் "நண்பன்" என்ற வேதாந்த—தத்துவ இதழை ஆரம்பித்து, ஒன்பது மாதங்கள் வரை நடத்தினர்!


சிறிது காலம் தத்துவ நூல்களில் ஈடுபட்டு பல அரிய கருத்துகளை வெளியிட்டார். தத்துவத்தில் மனம் ஈடுபட்டபின், "இரக்கம்" "சிபிலைன் இலைகள்" போன்ற கவிதைகளை தத்துவ உணர்வோடு, எழுதி வெளியிட்டார். 1817-ல் சுய சரிதையையும் எழுதி முடித்தார்.

உடல் நலம் மிகவும் சீர்கெடத் தொடங்கியது. இருந்தாலும், "Aides to R flection" "The Consitution of Church and State; Confessions of an Enquiring Spirit, Aaia Poetae" போன்ற நூல்களை எழுதி முடித்தார்.

இறுதிக் காலத்தில் அவருடைய மேதைமையும் தத்துவப் புலமையும் சிறந்த முறையில் சுடர்விட்டது. கவிஞர் என்ற பெயரைவிட தத்துவ அறிஞர் என்ற பெயரே அவருக்குப் பொருத்தமாக விளங்கியது. அதீத இயற்கையில் நம்பிக்கையுள்ளவர்; அதை மனத் தத்துவ முறையில், காவிய நயத்தோடு கையாண்ட முதல் கவிஞர் அவரே. அவருடைய படைப்புகள் அளவில் சிறியதாய் இருந்தாலும், அசாதாரண நயம் பெற்றவை. அவர் அறுபத்திரண்டு ஆண்டுகள்தான் வாழ்ந்தார். ஆனால் அவருடைய இலக்கியத் தரமும் செறிவும் மிகுந்த படைப்புகளுக்கு முடிவான ஆயுள் இல்லை.

—கோவை வானவன்

## இப்படி ஒரு ஆசை!



ஷா ஒரு சமயம் தென் ஆப்பிரிக்காவுக்குப் போயிருந்தார். அங்கே ஒரு குளத்தில் நீந்திக் கொண்டே வேடிக்கையாகப் பொழுதைப் போக்கினர். அவரோடு இன்னும் சில சிறுவர்கள் நீந்திக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு 'அவர்' யார் என்று தெரியாது. "இந்தக் கிழவனின் தலையை எப்படியாவது நீருக்குள் அமுக்கி வேடிக்கைப் பார்க்க வேண்டும்" என்று ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். தங்களுக்குள் ஒரு பையனைத் தூண்டிவிட்டு, இப்படிச் செய்தால் ஒரு 'ஷில்லிங்' என்று பந்தயமும் வைத்துக்கொண்டார்கள். அச்சிறுவனும் ஒப்புக்கொண்டு ஷாவின் அருகில் வந்தான். ஆனால் ஷாவின் மீசையையும் தாடியையும் பார்த்து பையன் வெல வெலத்துப் போய்விட்டான். ஷா அவனைப் பார்த்து, "என்னடா, பையா?" என்று விசாரிக்கவே சிறுவன் தட்டுத் தடுமாறி விஷயத்தைக் கக்கிவிட்டான்.

"இவ்வளவுதானே! கொஞ்சம் பொறு. ஒரு 'தம்' எடுக்கிறேன். அப்பொழுது நீ என் தலையை நீருக்குள்ளே அமுத்து" என்று கூறினர் ஷா. அவர் கூறியபடி அச்சிறுவன் செய்துவிட்டு, வெற்றிப் பெருமிதத்துடன் பந்தயத் தொகையை பெற்றுக்கொள்ளக் குளக்கரைக்குத் திரும்பினன்.

—இ. சர்தார் மன்சூர்

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 10—11—68 இதழ் 16


## திரு. நிக்சனது வெற்றி?

அனைத்துலகும் ஆவலுடன் எதிர்பார்த்து வந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் உலகத்துக்கு ஒரு வியப்புக் குறியைப் பரிசாகத் தந்துவிட்டு முடிவுப் பெற்றுவிட்டது. அவர் பதவிப் பொறுப்புக்கு அடுத்த ஜனவரி இறுதியில்தான் வரவிருக்கிறார் என்றாலும், திரு. நிக்சன் தான் ஜனாதிபதி என்பது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர் திரு. நிக்சன் என்றாலும், அவரது கட்சிக் கொள்கைகள்தான் இனி செயல்படுமென எதிர்பார்க்கப்பட்டாலும், அமெரிக்கக் காங்கிரசின் மேல் கீழ் இரு சபைகளிலும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்களே பெரும்பான்மை பலம் பெற்றிருக்கிறார்கள் என்கிற நிலையில் திரு. நிக்சனின் முழு வலிவும் செயல்படுத்தப்பட முடியும் என்று எதிர்பார்க்க வழியில்லை.

அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தல் முழுக்க முழுக்க அந்த நாட்டுக்குரிய விவகாரம் என்றாலும், அதன் தலை எழுத்துக்கு இந்தியா பிணையல்ல என்றாலும், இந்தியாவின் தலையெழுத்துக்கு, அமெரிக்காவும் பிணையுண்டிருக்கிறது என்பது ஒரு அரசியல் நிலையாக விருக்கின்றவரையில், இதுபற்றி கருத்துரைக்கும் அல்லது விமர்சிக்கும் உரிமையை நாம் பெற்றுவிடுகிறோம்.

"இந்தியாவுக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவியளித்து வரவேண்டும்;

இந்தியாவில் ஜனநாயகம் தோல்வியடைந்தால், உலக அளவில் அது மிகப் பெரிய பேராபத்தாகும்.

இந்தியாவில் அபிவிருத்திப் பணி துரிதமடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும்படி அமெரிக்கா வலியுறுத்த வேண்டும்."

என்று அவர் கருத்தறிவித்திருப்பதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இந்தக் கருத்து 1967 அக்டோபரில் ஒரு கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளது. அப்போதைய ஜனாதிபதிக்கும் காங்கிரசுக்கும் எடுத்துக் காட்டுவதற்கு எழுதிக் காட்டிய கருத்து இது.

சரியாக ஓராண்டுக்குப்பிறகு, இக்கருத்தைக் கூறியவரே, அதனைச் செயல்படுத்தவேண்டிய பொறுப்பான பதவியைப் பெற்று விட்டிருக்கிறார்.

திரு நிக்சனது கட்சிக் கருத்துக்கள் இதற்கு நேர் மாறானவை என்பதையும் நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது.

(1) வெளிநாடுகளுக்கான உதவி பெரும்பாலும் அரசியல்லாபத்துடன் தான் இருக்க வேண்டும்;

(2) அவ்வாறளிக்கப்படுகின்ற உதவிகள் சோஷலிச மறுமலர்ச்சிக்குப் பயன்படக் கூடியதாகவிருக்கக் கூடாது.

(3) ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்கள் பெரும் அளவுக்குத் தயாரிக்கப்பட வேண்டும்.

இதுபற்றி விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால் அமெரிக்க அரசியலைப் பொறுத்த மட்டில் கட்சியின் கருத்துக்களை, கட்சி உறுப்பினர்கள் மீறிச் செயல்படுவதென்பதோ புறக்கணிப்பது என்பதோ புதுமையான ஒன்றல்ல! கட்சியும் அதனை பொருட்டாக்கிக்கொள்வதில்லை.

ஆனால், மேலே எடுத்துக்காட்டியபடி நிக்சனது கருத்துக்களும், கட்சிக் கருத்தோடு இணைந்தே இருக்கிறது. அதேசமயம் 1967 கட்டுரையில் காணப்படுகின்ற வாசகங்கள்," நிக்சனை இனம் கண்டுகொள்ள முடியாத அளவுக்கு மூடிவைத்து விடுகிறது.

கட்டுரை மூலம் இந்திய உதவியை வலியுறுத்துகிறார். சொந்தக் கருத்து என்றதில், வெளிநாட்டு உதவிகள் அரசியல் லாபத்தோடு இருக்கவேண்டும்—சோஷலிச அமைப்புக்களுக்கு அது பயன்படக் கூடாது என்றும் தெரிவிக்கிறார்.

அதே சமயம், இந்தியாவின் மீது பெரும் அளவுக்கு அனுதாபமுடைய ஜனநாயகக் கட்சியினரின் பெரும்பான்மை நமக்கிருக்கிறது என்பது ஒரு ஆறுதல் தரக்கூடிய விஷயம்தான். என்றாலும், பார்லிமெண்டின் பெரும்பான்மையில்லாமலேயே அமெரிக்க ஜனாதிபதி செயல்படவும் முடியும் என்கிற அதன் அரசியல் சட்டமும் இருக்கிறது.

எனவேதான் திரு. நிக்சனின் வெற்றி ஒரு வினாக் குறியாகி நிற்கிறது. ஒரு நாடு, இன்னொரு அயல் நாட்டுக்கு உதவுவதென்பது, அந்த நாட்டின் பொருளாதார வளப்பத்தை யொட்டிதான் இருக்க முடியும். உலக நிலையில், எந்த ஒரு நாடும், எந்த ஒரு நாட்டையும் அலட்சியம் செய்துகொண்டிருக்க முடியாது. அதற்காக, பொருளாதார உதவிகள் செய்துகொண்டிருக்க வேண்டும் என்பதுமில்லை.

வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ந்துகொண்டிருக்கிற நாடுகளுக்குப் பொருளாதார மூலதன உதவிகள் நல்கி, அதன் வளர்ச்சியில் பங்கு பெறுவது என்பது மனிதாபிமான அடிப்படையில் நிகழ்வதுவே அல்லாமல், அரசியல் அடிப்படையில் என்று உருப்பெறுமானால் விளைவு விபரீதமானதாகத்தான் இருக்க முடியும்.

இதே கருத்தோடு குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. நிக்சனது வெற்றிகண்டு வளரும் நாடுகள் கவலைப் படத் தேவை இல்லை. இந்தியாவும்தான்!

குறிப்பாக இந்தியா இனியும் அயல் நாட்டு மூலதனத்தை நம்பியே தன் திட்டங்களை வகுத்துக்கொள்ள முடியாது—கூடாது.

அமெரிக்க உதவி என்பது ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த திரு. ஜான்சனது காலத்திலேயே வெட்டப் பட்டும்—நிறுத்தப்பட்டும் வந்திருக்கிறது என்பதையும், அதன் விளைவுகளையும் நாம் அனுபவித்துவிட்டோம்!

இதே நிலைதான் இனியும் நீடிக்கக்கூடும் என்ற பொதுநிலைமையை உணர்ந்துகொண்டு தன் கையே தனக்கு உதவி என்றுதான் திட்டச் செயற்பாடுகளில் இந்தியா இறங்கித் தீரவேண்டும்! அதுதான் வருங் காலத்துக்கும் நல்லது!

திரு. நிக்சனது அநுதாபம் இந்தியாவுக்குக் கிடைக்கும்—கிடைக்கவேண்டும்—அதுதான் அவரது கட்டுரை மூலம் நாம் எதிர்பார்க்கிறோம் என்பதோடு, கடும் போட்டி என்றாலும், வெற்றி பெற்று வந்துள்ள அவரை நாம், வாழ்த்துகிறோம்! வரவேற்கிறோம்.

# கேள்வி ? பதில்

**1. அ. இ. கா. க. கூட்டத்தில் கலந்துகொண்ட விநாயகம், காங்கிரசுத் தலைவர்கள், கழக ஆட்சியைப் புகழ்வதைக் கண்டித்திருப்பது ஏன்?**

கண்டிக்கவேண்டிய இடத்தில் தானே கண்டித்திருக்கிறார்! கருத்திருமனார் இந்தக் கூட்டத்தில் கலந்துவில்லை போலும்! அவர் இல்லாத குறையை விநாயகம் ஈடுசெய்திருக்கிறார்! தமிழகக் காங்கிரசாரின் இதயம் எப்படி இருக்கிறது பார்த்துக் கொள்ளுங்கள்! என்று திறந்து காட்டியிருக்கிறார்! இதுகூட உங்கட்குப் பொறுக்கவில்லையா!

**2. தமிழகத்தில் புயல் வீசும் என்ற முன்னறிவிப்புப் பொய்த்து விட்டதே?**

பொய்க்கவில்லை. அது திசை மாறி அ. இ. கா. க. கூட்டம் நடைபெற்ற குன்கா நகர் பக்கம் போய்விட்டிருக்கிறதே — நீர் கவனிக்கவில்லையா?

**3. மதுவிலக்குக் கொள்கையில் காங்கிரசுக் கட்சி பின்வாங்கி இருப்பதற்குத் தனிக் காரணம் ஏதாவது உண்டா?**

கொள்கை ரீதியாக மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியாகவும் பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற புதிய ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறதாம் இப்போது. பல மாநிலங்கள் அவற்றை முழு வெற்றியுடன் செயல்படுத்துவதற்கு இப்போது "பொருளாதாரம்" இடந்தராததால் 7 ஆண்டுகள்வரை அதனைக் கிடப்பில் போட்டு, அதற்கு அப்புறம் இது பற்றிப் பேசலாம் என்று வாய்ப்பூட்டும் போட்டிருக்கிறார்கள். இதில் தனிக் காரணம் என்று ஒன்றை ஆராய்வானேன்?

**4. வியட்நாம் குண்டு வீச்சுக்கள் நிறுத்தப்பட தேர்தலும் ஒரு காரணம் என்பது சரியா?**

அதுவும் ஒரு காரணமாக இருக்கக்கூடும். அல்லது போவது தான் போகிறோம்; வியட்நாமியரின் பொல்லாப்பு எதற்கு? புதிய ஜனாதிபதி இதில் எப்படி நடந்து கொள்கிறார் பார்ப்போமே! என்பது போன்ற யோசனைகளின் விளைவாகவும் இருக்கக்கூடும்! நிறுத்தப்பட்டது வரையில் மகிழ்ச்சிகரமான சேதிதானே!

**5. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது என்பதற்கு ஒரு உவமை காட்ட முடியுமா?**

முடியாத அளவுக்குள்ள வினாவா இது? எவ்வளவுதான் உரத்து உரத்துக் கூவினாலும் காங்கிரஸ், வளர்ச்சியடைந்து விட்டதாகக் கூறிவிட முடியாது என்பது பொருந்துகிறதா பாருங்கள்!

**6. நாகர்கோயில்தேர்தலில் காமராசர் போட்டியிடக்கூடாது என்பது சுப்பிரமணியனாரின் விருப்பமா?**

அப்படித்தான் அவரது பேச்சு எடுத்துக் காட்டுகிறது. அது போன்ற ஒரு ஆசையை காமராசருக்கு ஊட்டாதீர்கள் என்றல்லவா கேட்டுக்கொண்டிருக்கிறார்!

**7. மொழிவழி மாநிலங்கள் பற்றி நிஜலிங்கப்பா சொல்லிஇருப்பவை எப்படி இருக்கிறது?**

இந்தியா ஒரு சர்வாதிகார நாடாகவிருக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தை எடுத்துக் காட்டுவதாகவிருக்கிறது. மொழிவழி மாநிலங்கள் இருப்பது ஆபத்து என்று இப்போது வந்து கூறும் இவர், மாநில மொழிகளுக்கு முக்கியத்துவம் காட்டித் தான் காந்தியார், சுதந்திரப் போருக்கு வீரர்களைத் திரட்டினார் என்பது தெரியாமலா இருந்தார்? இந்தியை நுழைக்க, இந்த வழி இடையூறாக இருக்கிறதென்று அவர் நினைக்கிறார் போலும்! கர்நாடகத்தார் விழித்துக் கொண்டு இந்த எட்டப்பரைக் கவனிக்க முனைப்புக்கொள்ளும் முன் அவர் தமது கருத்தை மாற்றிக்கொள்வார் என்று நம்புவோம்! இதுவும் அவருக்கு இயல்பான ஒன்றுதான்!

**8. சேலம் இரும்பாலைத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதா என்ன?**

இல்லை. மத்திய அரசின் 4வது திட்டம் இன்னும் விழித்தெழவில்லை; உறக்கத்திலிருக்கிறது. எழுந்து செயல்படும்போது சேலமும் செயல்படத் தொடங்கி விடும்.

**9. இலங்கையில், கண்டி சிங்களவர்கள் தனிநாடு கோருகிறார்களாமே உண்மையா?**

இல்லை. தனியாக ஒரு "சமஷ்டி" அரசு கோருகிறார்கள் என்பதுதான் உண்மை!

**10. சிங்கப்பூரில் திராவிட முன்னேற்றக் கழகம் கலைக்கப்பட்டு விட்டதாமே?**

"திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயரைத்தான் மாற்றிவிட்டார்களாம், சிங்கை அரசின் உத்தரவு காரணமாக!

**11. சுகர்னோவுக்குப் பலமனைவிகள் இருக்கும்போது, ஹார்த்தினி மட்டும் சொத்துக்களை விற்க முடியுமா?**

முடியும். 1965லேயே சுகர்னோ இவருக்குத் தம் சொத்துக்கள்முழுவதற்கும் உயில்மூலம் உரிமை கொடுத்துவிட்டாராம்!

**12. காங்கிரசுக்கு மாநகராட்சித் தேர்தல் புகட்டும் பாடம் ஏதாவது உண்டா?**

உண்டே! எந்தச் சூழ்நிலையிலும் வாக்காளர்கள் தூற்றப்படக்கூடாது என்ற பாடத்தைக் கற்பித்திருக்கிறதே!

**13. மத்திய அரசு போலீசின் அதிகாரத்தை அதிகப்படுத்த தனிச் சட்டம் வரப்போவது பற்றிய தங்கள் கருத்தென்ன?**

மாநில அரசுகளின் மீதான நம்பிக்கைக்குறைந்துவிட்டதுஎன்பதுதான் இதன் பொருள். இதை விட, பார்லிமெண்டைக் கலைத்து விட்டு, ஜனாதிபதி மூலம், "இந்த நாடு சர்வாதிகார நாடாகப் பிரகடனப்படுத்தப்படுகிறது" என்று அறிவிப்புக் கொடுத்துவிடலாம்! எதிர்காலம் இவற்றையெல்லாம் அனுமதிக்குமானால் "இந்தியாவின் எதிர்காலம்" எப்படி இருக்கும் என்கின்ற வினாவுக்கு நல்ல பதில் கிடைக்காது!



# அறிஞர் அண்ணாவின் அமெரிக்கப் பயணத்தில்...

— கு. சொக்கலிங்கம் I.A.S. —

அமெரிக்க நாடு, உலகின் பல நாடுகள் முன்னேறி வருவதற்கு உதவி வருவது எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்ட அமெரிக்க நாட்டில், ஒரு பல்கலைக் கழகம் நிறுவ சென்னை மாநிலம் 200 ஆண்டுகளுக்கு முன் உதவியது என்றால் வியப்புக்குரியதல்லவா! ஆயினும் தமிழகத்தின் அந்த உதவியைக்கொண்டே இன்றுள்ள யேல் பல்கலைக் கழகம் உயர்ந்தோங்கி வளர்ந்திருக்கிறது என்பது நமக்கெல்லாம் பெருமதிப்புக்குரிய செய்தியாகும்.

யேல் பல்கலைக் கழகம், நியூயார்க் நகரிலிருந்து வடகிழக்கே 100 மைல் தொலைவிலுள்ள நியூஹேவன் நகரின் மையத்தில் அமைந்துள்ளது. இது சட்டப் படிப்புக்குப் பெயர் பெற்றது.

1673-ல் இதன் மூலக்கல்லூரி, நிதி நெருக்கடி காரணமாக மூடும் தருவாயிலிருந்தது. நிதிகோரி அக்கல்லூரி விடுத்த அபயக்குரலுக்கு செவிசாய்த்து உதவி செய்ய முன்வந்தவர், அக்கல்லூரியின் பழைய மாணவராகிய சென்னை ஆளுநராகவிருந்த திருவாளர் யெலியூயேல் என்பவராவார். அக்கல்லூரியின் புணர் வாழ்வுக்கு யெலியூயேல் அளித்த உதவி பொன்னல்ல; டாலர்கள் அல்ல! சில பஞ்சு மூட்டைகளும், சில பழைய புத்தகங்களுமேயாகும், இவற்றை விற்றுக் கிடைத்த சுமார் 570 பவுன்களைக் கொண்டுதான் அக்கல்லூரி, இன்றைய உலகப் புகழுக்கு உரித்தாகி இருக்கிறது. யெலியூயேலின் பெயராலேயே யேல் பல்கலைக் கழகமாகவும் வளர்ந்து, தானும் புகழ் பெற்றுக்கொண்டு தக்கோரையும் புகழ்ந்துகொண்டு வருகிறது!

யேல் பல்கலைக் கழகத்தின் தனிச்சிறப்பு, அது ஏற்பாடு செய்துள்ள 'சப்-(பல்லோஷிப்' (Chubb fallowship) திட்டமாகும்.

இத்திட்டமானது சில வரைமுறைகளைக் கொண்டு விருந்தினராக வரவேற்கப்படுபவரை கௌரவிப்பதே யாகும். இது ஒரு பட்டம் அல்ல என்பது வலியுறுத்திச் சொல்லப்பட வேண்டிய விஷயமாகும்.

இதன்படி, ஆண்டுக்கொருமுறை, மிகச்சிறந்த தலைவர் ஒருவரை அழைத்து பல்கலைக் கழகத்தில், மாணவர்களிடையே ஒருவார காலம் தங்கி இருக்கச் செய்து, தலைவரும் மாணவர்களும் பரஸ்பரம் நெருங்கிப் பழகவும், பேசவும் வாய்ப்புகளை உண்டாக்கித் தருகிறார்கள்.

மாணவர்கள், பெருந்தலைவர்களோடு நெருங்கிப் பழக ஏற்பாடுகளைச் செய்வதால், மாணவர்களது நற்பண்புகள் வளரும் என்ற நோக்கத்திலேயே இப்படிச் செய்யப்படுகிறது.

இந்த முறையினைப் பின்பற்றி, 1967 வரையில் யேல் பல்கலைக் கழகம், பிரபல அமெரிக்கர்களையே சப்-பெல்லோஷிப்பாக அழைத்து வந்துள்ளது. இதுவரை தலைவர் ட்ருமன், செஸ்டர்பௌல்ஸ், கவர்னர் ரிகானன் போன்ற தலைவர்களும், அரசியல் மேதைகளும் சப்-பெல்லோஷிப்பாக கௌரவிக்கப் பட்டிருக்கிறார்கள், இவர்கள் அனைவரும் அமெரிக்கர்களே ஆகும்.

1968-ல்தான் யேல் பல்கலைக்கழகம் முதன் முதலாக அமெரிக்காவுக்கு வெளியிலிருந்து ஒரு தலைவரை அழைக்க முடிவு செய்தது. பலதரப்பட்ட விவாதங்களுக்கும், கருத்து மோதல்களுக்கும் பிறகு ஆராய்ந்து எடுத்த முடிவு நம் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை அழைப்பது என்பதாகும்!

யேல் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் 15—4—68ல் சென்னையிலிருந்து புறப்பட்டார்கள். சென்னையிலும் பம்பாயிலும் விமான நிலையத்துக்குப் பல்லாயிரக்கணக்கானோர் வந்திருந்து வழி அனுப்பி வைத்தனர். பம்பாயிலிருந்து நியூயார்க்குக்குச் செல்ல நேர் விமானங்கள் இருக்கின்றன. இருப்பினும் வழியில், ரோமிலும், பாரிசிலும் ஓரிருநாட்கள் தங்கிச்செல்ல ஏற்பாடாகி இருந்தது.

ரோமில் ஒரு நாள் தங்கி இருந்தாலும், அங்கு போப் ஆண்டவரைச் சந்தித்து கோவாவின் விடுதலை வீரர்களுக்காகப் பரிந்துரை வழங்கினார்கள் அறிஞர் அண்ணா அவர்கள். கோவாவின் விடுதலைக்காகப் போராடிய விடுதலை வீரர்கள், இன்னமும் போர்ச்சுகீசியச் சிறைகளில் வாடிக்கொண்டிருப்பது நாமறிந்ததே! அவர்களை விடுவிப்பதற்காக, போப்பாண்டவர் பரிந்துரைத்து உதவ வேண்டுமென அண்ணா அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். இதன் பலன் நாளடைவில் தெரியலாமென நாம் எதிர்பார்க்கலாம்.

பாரிசில், யுனெஸ்கோ (Unesoo) வைப் பார்வையிட்டு, அதன் பொதுக்காரியதரிசியான ஆதிசேஷையாவுடன் பேச்சுநடத்தி, தமிழிலுள்ள பல நூல்களை உலக மொழிகளில் வெளியிட யுனெஸ்கோ நிறுவனம் உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள்.

நாங்கள் பாரிசிலிருந்தபோது அங்கு முழு அமைதி நிலவியது. தெருக்களில் காவல் அலுவலர்களையே காண முடியவில்லை. அந்த அளவுக்கு அமைதி பூத்திருந்த பாரிஸ் நகரில், மே, ஜூன் மாதங்களில்

உண்டான அமளி, எப்படி ஏற்பட்டிருக்கக்கூடுமென நினைத்துப் பார்ப்பதே கடினம்!

பாரிசிலுள்ள லோவ்ரே மியூசியத்தில் (Louvre Museum) உலகின் தலைசிறந்த கலைச்செல்வங்கள் குவிந்து கிடக்கின்றன. இங்கிருந்து 20 மைல் தொலைவிலுள்ள வெர் செயில்ஸ் (Versailles) மாளிகையில் பிரெஞ்சுநாட்டின் புகழ்மிக்க மன்னர்கள் வாழ்ந்தனர். பாரிஸ் செல்லும் ஒவ்வொருவரும் கட்டாயம் பார்க்கவேண்டிய இடம் இது. ஒரு நாள் முழுதும் இருந்தால்தான் மாளிகை முழுவதையும் பார்க்கமுடியும். நாங்கள் மூன்று மணிநேரம் மட்டுமே இருக்கமுடிந்தது. எங்களுக்கு மாளிகையைச் சுற்றிக் காண்பிக்கவந்த எர்லிச் (Erlich) என்பவர், 60 வயதுக்கு மேற்பட்டவர். நன்கு படித்தவர், அரசி அண்டோடிட்டைப் பற்றிச் சொல்லியபோது, அவரது கண்களில் நீர் பணித்தது. அவர், அரச குடும்பத்தினர் சாப்பிடும் அறையைப்பற்றி விளக்கியபோது ஒரு சுவையான விவரத்தைச் சொன்னார்,

பழங்கால பிரான்ஸ் நாட்டில், மன்னர் சாப்பிடுவதை, மக்கள் சென்று பார்க்கலாம்! நல்ல உடையும், ஒரு வாளும் இருந்தாலே போதும்! இவற்றை அணிந்து யார் போனாலும், அவர்கள் தடுக்கப்படுவதே இல்லை! பலபேர், இவற்றை இரவல் வாங்கி அணிந்துகொண்டு கூட போவார்களாம்! மன்னர் குடும்பம் சாப்பிடும் போது சுற்றிலும், அறைக்குள்ளும் பெருங்கூட்டம் நின்று வேடிக்கைப் பார்ப்பது வழக்கமாம்!

பாரிசிலிருக்கும்போது, அண்ணா அவர்கள் பிரான்ஸ் நாட்டு செனட் தலைவர் மன்னெர் வில்லி (Monner Ville) என்பவரைச் சந்தித்தார்கள். இவர் ஒரு நீக்ரோ ஆவார். மேற்கிந்தியத் தீவில் பிறந்தவர். அவர் பிரெஞ்சு நாட்டின் துணைத்தலைவர் பதவிபோன்ற செனட் தலைவராக, சென்ற 16 ஆண்டுகளாவே தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார் என்பது, பிரெஞ்சு மக்கள் இன, நிற வேற்றுமைகளைப் பாராட்டுவதில்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

எங்களை செனட்டுக்கு அழைத்துச் சென்றவர் செனட்டர் கிளாரோ என்பவர். அவர் சென்ற ஆண்டு சென்னை வந்திருந்ததால், அண்ணா அவர்களிடம் ஆழ்ந்த அன்பும், மரியாதையும் கொண்டிருந்தார். புகழ்மிக்க லோவ்ரே கண்காட்சிச் சாலையை காலையிலேயே திறக்க ஏற்பாடு செய்து, நாங்கள் பார்க்க வசதி செய்தார். உலகிலேயே மிகப் பெருமைபெற்றது இந்த காட்சிச்சாலை. பல நாட்கள் தொடர்ந்து படித்தாலும் அலுக்காது என்று சொல்கிறார்கள். வியக்கத்தக்க—கலைச்சிறப்புள்ள சிலைகள், ஓவியங்கள்! இதை நிறுவியவர்களுக்கு உலகே கடமைப்பட்டுள்ளது.

அடுத்து நாங்கள் சென்ற நியூயார்க்கிற்கும், பாரிசுக்கும்தான் எவ்வளவு வேற்றுமை!

நியூயார்க்கில் எல்லாமே பரபரப்புடன் நடப்பது போல் தோன்றுகிறது. வானுயர்ந்த கட்டிடங்கள்! விரைந்து செல்லும் கார்கள்! மக்கள் எல்லோருமே ஏதோ ஒரு வேலையாயிருந்தாலும், பொழுது போக்குக்காகவாயினும் முழு மூச்சுடன் ஈடுபடுகிறார்கள்! அதுவே பரபரப்பை விளைவித்துக் காட்டுகிறது!

அமெரிக்க நாடு குபேர நாடு என்பதை உலகறியும். ஆனால், அமெரிக்கர்கள் எவ்வளவு கடுமையாக உழைக்கிறார்கள் என்பதை அங்கு போய்ப் பார்த்தால்தான் உணர முடியும். உண்மையாக உழைக்கிறார்கள். உழைப்பும் கடுமை! கடுமைக்கேற்ற ஊதியம்—கைநிறைய! ஒரு மணி நேரம் வேலை செய்தால் இரண்டு டாலராவது கிடைக்கும். மணிக்கு இரண்டு டாலருக்குக் குறைந்து கொடுக்கக் கூடாதென்று சட்டம் செய்துள்ளார்கள்.

சாதாரணமாக வீடு கூட்டுபவர்கள், குழந்தை வைத்துக் கொள்பவர்களுக்கெல்லாம் மணிக்கு இரண்டு டாலர். கொஞ்சம் திறமைவேண்டிய தொழில்களாகிய தச்சு, பெயிண்டிங் முதலிய தொழில்களுக்கு மணிக்கு 4 அல்லது 5 டாலர் கிடைக்கும். ஆகவேதான் வீட்டு வேலைக்காரி, கார் டிரைவர், தச்சு ஆகிய வேலை பார்ப்பவர்கள் எல்லோருமே சொந்தமாக கார் வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்க நாடு முழுவதிலுமே, நாம் பார்க்கக் கூடிய காட்சி எங்கும் கார்களின் மிகுதியே! கார்விடுவதற்குக்கூட இடமில்லாத அளவிற்கு மிகுதி!! நம் நாட்டிலே பழைய கார்களைக்கூட கழுவித் துடைத்து, பளபளவென்று வைத்திருக்கிறோம். அங்கே புதுக் கார் கூட அழுக்கடைந்து நாள் முழுவதும் தெருவிலேதான் நிற்கிறது. துடைப்பதற்கு ஆட்கள் கிடையாது. கார் விடுவதற்குக் கொட்டகைகள் இல்லை. கார்களைப் பழுது பார்ப்பதற்கும் செலவு அதிகம் ஆகிறது ஒன்று இரண்டு ஆண்டுகள் உபயோகித்துவிட்டு கார்களை Automobile grave yard என்று சொல்லப்படும் ஒரு இடத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடுகிறார்கள். grave—yard என்றால் ஒதுக்கப்பட்ட—புதைகுழிக்கொப்பான இடம் என்று பொருள்படும்! "ஆடோமொபைல் கிரேவ்யார்டு' என்கிறபோது கார்களின் மயானம் என்றே சொல்லிவிடலாம்! இங்கிருந்து கார்கள் உடைக்கப்பட்டு இரும்பாக மீண்டும் விற்கப்பட்டுவிடுகிறது.

யேல் பல்கலைக் கழகத்தில் அண்ணா அவர்கள் 5 நாட்கள் தங்கி இருந்தார்கள். பல கல்லூரி மாணவர்களோடு நெருங்கிப் பழக வாய்ப்புக்கிட்டியது.

அந்நாட்டில் கல்லூரி மாணவர்கள் வயது முதிர்ந்தவர்களாக இருக்கிறார்கள். சராசரி வயது 21 என்று சொன்னார்கள், நம்நாட்டைவிட, 2, 3, ஆண்டுகள் கூட இருக்கிறது. மாணவர்களும் நன்கு வளர்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஆசிரியர் முன்பேகூட சிகரெட் குடித்தாலும் பெரியோர்களிடம் மரியாதையாக நடக்கிறார்கள்.

உடலால் வேலை செய்யத் தயங்குவதில்லை. நாங்கள் பல்கலைக் கழகத்துக்குச் சென்றவுடன் எங்களது பெட்டிகளை இரு மாணவர்கள் தூக்கிக் கொண்டு வந்து அறையில் வைத்தார்கள். நான் அதுபற்றி விசாரித்தேன். மாணவர்கள் எல்லோருமே ஓய்வு நேரங்களில் வேலை செய்கிறார்கள்! சாமான்களைத் தூக்கிவந்ததற்கான கூலியை —குறைந்தது இரண்டு டாலராவது இருக்கும்— அலுவலகம் கொடுத்துவிடுமாம்! பணக்கார வீட்டுப் பிள்ளைகள்கூட இம்மாதிரி வேலை செய்கிறார்கள். அதைக் கேவலமாக அந்த நாட்டில் நினைப்பதில்லை.

அண்ணாவோடு மாணவர்கள் எல்லாருமே பற்றுதலோடு பழகினர். கேள்விகளுக்கெல்லாம் அண்ணா தந்த விடைகள், ஒளிவு மறைவு இல்லாதிருந்தது

அவர்களை மிகவும் கவர்ந்துவிட்டது. உள்ளன்போடு பழகுகிறார் என்று பல மாணவர்கள் கருத்துரைத்தனர்.

பொதுவாக மாணவர்கள் நன்கு படிக்கிறார்கள். வெளிநாடுகளைப் பற்றி அதிகம் தெரிந்துள்ளார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று வந்தோரும் மாணவரிடையே பல பேர்.

நம் நாட்டைப் பற்றி அவர்கள் கேட்பவற்றுள் வருணச்சிரம முறை, பசுப்பாதுகாப்பு, போஷாக்குக்குறை, மொழிப் பிரச்சினை பற்றியே மிகுதியும் இருக்கிறது.

நம் நாட்டு உணவில் புரதச் சத்து குறைவாக உள்ளது தான். இந்நாட்டில் உழைப்புக் குறைவாக இருப்பதற்கு அடிப்படைக் காரணமென்று சிலர் நம்புகின்றனர். ஆகவே தான் நம் நாட்டில் நிரந்தரமாகப் புரதப் பஞ்சம் [Ptotein Famire) இருப்பதாகச் சொல்கிறார்கள். புரதப் பஞ்சமுள்ள நாட்டில் பசுக்களை எப்படிப் பாதுகாப்பது என்று ஆச்சரியப் படுகிறார்கள்.

நமது மொழிப் பிரச்சினையைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டுள்ளார்கள். இதன் காரணமாக நாட்டு ஒற்றுமைக்குக் குந்தகம் உண்டாகுமா என்று கேட்டதற்கு அண்ணா அவர்கள், கானடா நாட்டிலுள்ள மொழிப் பிரச்சினையைச் சுட்டிக் காட்டிய பிறகு அவர்கள் அது பற்றித் தொடரவில்லை.

அமெரிக்க நாட்டில் அண்ணா அவர்கள் இரண்டு பெரும் விவசாயப் பண்ணைகளைப் பார்வையிட்டார்கள்.

ஒன்று கனெட்டிகட் மாநிலத்திலுள்ள "அமைதி வெளிப் பண்ணை" (Silent-Velly Farm) என்பது. அந்தப் பண்ணையில் 255 ஏக்கர் நிலம் உள்ளது. 50 பசுக்கள் உள்ளன. இதன் சொந்தக்காரர், ஒரு உதவியாளருடன் பண்ணை முழுவதையும் பயிரிடுகிறார். இரண்டு கார்கள் வைத்திருக்கிறார். அவரிடம் உள்ள விவசாய எந்திரங்களின் மதிப்பு சுமார் இரண்டு லட்சம் ரூபாய்.

மாடுகள் கறப்பது இயந்திரம். கறந்த பால், குழாய் மூலம் குளிரச் செய்யும், இயந்திரத்திற்குப் போய்விடுகிறது. பாலைக் கண்ணால்கூடப் பார்ப்பதில்லை.

இன்னொரு பண்ணை, கான்சாஸ் மாநிலத்திலுள்ளது. அதன் பரப்பு 900 ஏகர். அதை தந்தை, மகன் இருவர் மட்டுமே பயிரிடுகிறார்கள். அவர்கள் உபயோகிப்பது சுமார் 9 லட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள். அவர் வீடு முழுவதும் குளிர்சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. பொதுவாக விவசாயத்தில் உற்பத்திப் பெருக்கம் நம் நாட்டில் உள்ளதைப்போல்தான் உள்ளது. பரப்பு அதிகமாயுள்ளதால் நிறைய உற்பத்தி செய்ய முடிகிறது. இப்பொழுது கான்சாஸ் பல்கலைக் கழகம், விவசாய உற்பத்தியில் ஒரு புரட்சியை உண்டுபண்ண பெருமுயற்சி மேற்கொண்டுள்ளது.

நாங்கள் சந்தித்த விவசாயிகள், விவசாயத்தில் பெரும் மாறுதல் நிகழ்த்திக்கொண்டே வருகின்றனர். இந்த ஆண்டு உபயோகித்த உரம், அடுத்த ஆண்டு கிடையாது. அதைவிட நல்ல உரத்தைக் கண்டுபிடிக்கிறார்கள். இயந்திரங்களும் மாறுகின்றன. இவைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள விவசாயி நிறைய படிக்க வேண்டியுள்ளது. விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகளும், அடிக்கடி பண்ணைகளுக்கு வந்து விவசாயிகளோடு பேசி, முற்போக்கு முறைகளைக் கையாள உதவுகிறார்கள் பொதுவாக விவசாயப் புரட்சி ஒன்று நடந்து வருகிறது என்றே சொல்லலாம்! இந்தப் புரட்சியில் புது உரங்கள், பாதுகாப்பு முறைகளோடுகூட, புதுவித வித்துகள் பெரிதும் உதவுகின்றன. கான்சாஸ் பல்கலைக்கழகத்திலுள்ள பண்ணையைச் சுற்றிக் காண்பிக்கும்பொழுது, புதுரக கோதுமை உற்பத்தி செய்யும் ஒரு சோதனையை அண்ணா பார்த்தார்கள்.

அந்தப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களிடம் அண்ணா, பஞ்சாபில் பயிரிட்ட குள்ள கோதுமையைப் பற்றிக் கூறியபொழுது அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்! இந்த விதையையும் வரவழைத்துத் தம் பண்ணையில் சோதனை செய்து பார்ப்பதாகச் சொன்னார்கள்.

அமெரிக்காவில் அறிஞர் அண்ணா சென்ற எல்லா நகரங்களிலும் நம் நாட்டு மாணவர்கள் நூற்றுக் கணக்கில் படித்து வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். மாணவர்களும், அண்ணாவைக் கண்டு பேசுவதிலே மிக்க ஆர்வம் கொண்டிருந்தனர். நியூயார்க் நகரில் நமது தூதுவர் ஜி. பார்த்தசாரதி ஏற்பாடு செய்திருந்த விருந்தில் கலந்துகொண்ட மாணவர்கள், அண்ணாவைச் சுற்றிலும் நின்றுகொண்டு பேச ஆரம்பித்ததும், அண்ணாவைக் காணவந்திருந்த பல அமெரிக்கர்கள் அண்ணாவின் அருகில் போகமுடியாது போகவே, பார்த்தசாரதியே வந்து மாணவர்களைக் கேட்டுக்கொண்டு மற்றவர்களை அறிமுகப்படுத்த வேண்டி வந்தது. எந்த நகரிற்குச் சென்றாலும் அங்கு பல மாணவர்கள் வரவேற்பார்கள் — விருந்துண்ண அழைப்பார்கள்!

நம் மாணவர்களுக்கு அமெரிக்க நாட்டில் நல்ல பெயர் இருக்கிறது. நல்ல உழைப்பாளிகள்; ஒழுக்க முள்ளவர்கள் என்று பொதுவாக மதிக்கப்படுகிறார்கள். ஒரு பேராசிரியர் மட்டும் நம் நாட்டுக் கல்வித்தரம் குறைந்து வருவதாகவும் அங்கு வரும் மாணவர்களை, அவர்களது படிப்புக்குத்தயார் செய்ய கொஞ்சகாலம் பிடிப்பதாகவும் கூறினார். மற்றபடி நாங்கள் சந்தித்த பேராசிரியர்கள் எல்லோருமே நம்நாட்டு கல்வித்தரம் பற்றிப் புகழ்ந்து பேசினார்கள்!

எங்கெல்லாம் நல்ல வேலைகளைக் கண்டாலும் அவைகளை நம் நாட்டில் செய்து பார்க்கவேண்டும் என்று தோன்றுவது இயல்பு. ரோம் நகரில் உள்ள பல அழகிய நீர் ஊற்றுக்கள் (Fountains) போல மகாபலிபுரத்தில் உண்டாக்க வேண்டுமென ஆசைப் பட்டார்கள். அதேபோல ஹானலுலுவில் கடற்கரையில் செய்யப்பட்டுள்ள உல்லாச ஏற்பாடுகளைப்பார்த்து நமது சென்னை மெரினா கடற்கரை இயற்கையழகிலே முதல் தரமாக இருந்தும்கூட, நன்குப் பாதுகாத்து அழகு செய்யப்படவில்லையேயென எண்ணி, நமது மெரினாவையும் அழகுப்படுத்த வேண்டுமெனச் சொல்லியுள்ளார்கள். ஹானலுலுவில் செய்யப்பட்டுள்ள வேலைப்பாடுகளில் பத்தில் ஒரு பங்கு மட்டும் செய்தாலே போதும்! நம் கடற்கறை உலகிலேயே முதல்தரமான உல்லாசஅரங்காகிவிடும். ஆகத்தான் போகிறது! அதுவும் விரைவிலேயே!

★

# தேடிவந்தவன்

உடுமலைநன்னன்

ரயிலைவிட்டு இறங்கினான் கோணப்பன். ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தான். கைப்பையிலிருந்து ஒரு குறிப்புப் புத்தகம் எடுத்தான். ஏதோ ஒரு பக்கத்தைப் பிரித்து அதிலுள்ள முகவரியைப் பார்த்தான். அதில், சாந்தலிங்கம் முதல் தெரு. கிளியூர் என்று பேனாவினால் எழுதப்பட்டிருந்தது.

முகவரியிலுள்ள சாந்தலிங்கத்தைத் தேடி கோணப்பன் விரைவு நடை போட்டான். அவன் ஒரு முரடன், மூர்க்கன். சாந்தலிங்கத்துக்கும், அவனுக்கும் எந்த விதத்திலும் முன்பின் தொடர்பே கிடையாது. புதிதாக இப்போதுதான் சந்திக்கப்போகிறான். அதுவும் வஞ்சகமான சந்திப்புத்தான்!

கோணப்பன் மலையூரிலிருந்து வருகிறான். கிளியூருக்கும், மலையூருக்கும் இடையே நாற்பது மைல்கள் இருக்கும்,

ஒரு சதித்திட்டத்துடன் வந்தவனே கோணப்பன். அவன் சாந்தலிங்கத்தைச் சந்தித்து சிரித்துப் பேசி இல்லாத சிறப்பெல்லாம் இருப்பதாக உயர்வுபடுத்திச் சொல்லி அவர் விட்டில் விருந்தினராகத் தங்கி ஊர் அடங்கிய பின் பணப் பெட்டியில் கைவைக்க வந்தவன் தான் அவன். திருடி அகப்பட்டாலும் அவனுக்குக் கவலை இல்லை. எப்படியோ சாந்தலிங்கம் கேவலப்பட வேண்டும்.

முன்பின் சந்திப்பில்லாத அவன் சாந்தலிங்கத்தின் பணத்தை ஏன் திருடவேண்டும்? அவனுடைய தொழில் அதா? கிடையாது. திருட வேண்டிய அவசியமே இல்லை. அவசியத்தை உண்டாக்கிவிட்டவர் வேறொருவர். அவர்தான் மலையூர் மருதமுத்து.

சாந்தலிங்கமும் மருதமுத்துவும் நண்பர்களாக இருந்தவர்கள். இப்போது நட்பு முறிந்துவிட்டது. காரணம் சாந்தலிங்கம் அல்ல. மருதமுத்துதான்.

மருதமுத்து ஒரு அடிதடிக் கேசுக்கு சம்பந்தமானார். தன்னுடைய பார்ட்டி வெற்றிபெற வேண்டும் என்பதற்காக பொய் வழக்கொன்றை ஜோடித்து நீதிமன்றத்துக்கு அனுப்பினார். அந்த வ்ழக்குக்கு சாந்தலிங்கத்தை முக்கிய சாட்சியாக அழைத்தார். சாந்தலிங்கம் கேசின் முழு விபரமும் அறிந்துகொண்டு சாட்சியாக இருப்பதற்கு மறுத்துவிட்டார். மருதமுத்து அதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அதன் எரிச்சல் வளர்ந்தது. அதே சமயம் மருதமுத்துவின் கேசும் தோல்வி கண்டது. எதிர்த்தரப்பு நியாயமே வென்றது. சாந்தலிங்கம் மட்டும் சாட்சி சொல்லியிருந்தால் நிச்சயம் மருதமுத்துவுக்கு வெற்றி கிடைத்திருக்கும்.

சாந்தலிங்கம் எப்படி சாட்சி சொல்லுவார். அவர் தன் மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பவரல்லவே. பணங்காசு இருக்கிறது என்பதற்காக மனிதப் பண்பாட்டை விட்டுவிட முடியுமா? விட்டுவிட முடியும்! இதயத்தில் ஈரமில்லாமல் இருந்தால்!! சாந்தலிங்கத்தின் இதயம் அப்படிக் காய்ந்துபோனதல்லவே. அவர் ஒரு வெள்ளையுள்ளம் படைத்தவர். யாரையும் நம்புவார். முடிந்த அளவு நன்மையே செய்பவர். நியாயத்தின் நிழலில் நிற்பவர்.

கோணப்பன், சாந்த லிங்கத்தின் பங்களாக் காம்பவுண்டுக்குள் நுழைந்தான். பச்சைக் கம்பளத்தை விரித்து அதன்மீது வெண்மையான முத்தொன்று வைத்ததுபோல பசுந்தரையில் வெள்ளை வெளேரென்று சுவர் பளிச்சிட பங்களா ரொம்ப அழகாகக் காட்சி தந்தது. அதைப் பார்த்ததும் கோணப்பன் மலைத்து விட்டான். ரயிலைவிட்டு இறங்கி இரண்டு மைல் தூரம் உச்சிவெய்யிலில் நடந்துவந்த அவனுக்கு பங்களாவின் அசோகமரம் தந்த நிழல் மிகமிகக் குளிர்ச்சியாக இருந்தது.

நிழலில் நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு பங்களா வாசலுக்குப் போனான். வெளிக்கதவு சாத்தப்பட்டிருந்தது. தயங்கி நின்ற கோணப்பன் "சார்" என்று ஒரு குரல் கொடுத்தான். உள்ளே இருந்து ஒருவன் வெளியேவந்தான். அவன் கோணப்பனைப் பார்த்து, "யார் நீங்க?" என்றான். அவன் தோற்றமே சமையல்காரன் என்பதைக் காட்டியது. அதை உணர்ந்துகொண்ட கோணப்பன் "ஐயா இருக்கிறாரா?" என்றான். "வெளியே போயிருக்கார்,வந்திடுவார். உள்ளே வந்து உட்காருங்க" என்றான் சமையல்காரன். முன் ஹாலில் போய் கோணப்பன் உட்கார்ந்தான்.

அந்த முன் அறையில்—

விவேகானந்தர், இராமலிங்கஅடிகள், காந்தியார் ஆகியோரின் கம்பீரத் தோற்றமுடைய படம்மட்டுமே இருந்தது. கோணப்பன் அவற்றை ஒரு பார்வை பார்த்தான். ஆனாலும் அவன் சிந்தனையெல்லாம் வேறு முறையில் இருந்தது. மருதமுத்து சால்லிக்கொடுத்த முறையிலேயே சாந்தலிங்கத்திடம் பேசவேண்டும் என்ற நினைவில் எதையெதையோ முறைப்படுத்தி நினைக்கத் துவங்கினான். காரியம் கெட்டுவிடக் கூடாதல்லவா.

சமையல்காரன் முன் உபசரணையாக ஒரு டம்ளர் மோர் கொண்டு வந்து கோணப்பன் முன்னால் வைத்

தான். வீடு தேடி வந்தவர்க்கு முறையாகச் செய்யும் மரியாதையின் இலக்கணத்தைக்கூட சாந்தலிங்கத்தின் வீட்டில் அறியலாம் போலிருக்கே. என்ற ஒரு உணர்வுகூட முரடன் கோணப்பன் மனதிலும் கொஞ்சம் லேசாக எழுந்து மறைந்தது. மோரை எடுத்துக் குடித்தான்.

ஒரு மணி நேரம் கழிந்திருக்கும். வெளியே போயிருந்த சாந்தலிங்கமும் வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்ததும் 'விசு'க்கென்று எழுந்தான் கோணப்பன். ஏற்கனவே மருதமுத்து வீட்டில் சாந்தலிங்கத்தின் போட்டோவை நன்ருகக் கவனித்துக் கொண்டுதான் கோணப்பன் வந்தான். அதனுல்தான் சாந்தலிங்கத்தைப் பார்த்ததும் அறிந்து கொண்டான். 'வணக்கமுங்க'' என்ருன். "வணக்கம். உட்காருங்க" என்று சொன்ன சாந்தலிங்கம், ''நீங்க யாரு......எனக்குத் தெரியலையே'' என்று ஒரு புன்னகையோடு கேட்டார். ''என் பெயர் கோணப்பன். நான் இங்கே வியாபார விஷயமாக ஒருவரிடம் வந்தேன். நான் பார்க்கவேண்டிய ஆள் ஊரில் இல்லை. நாளைதான் வருவாராம். என்னைச் சிதம்பரம்தான் அனுப்பினுர். உங்கள் நண்பர் சிதம்பரம் தான்.'' என்று ஒரு போடு போட்டான் சாதுரியப் பேச்சில்.

மருதமுத்து சொல்லிக் கொடுத்ததைத்தான். அப்படியே வாந்தி எடுத்திருக்கிருன் கோணப்பன். சாந்தலிங்கத்தின் உயிர் நண்பர் சிதம்பரம். அவரும் மலையூர் வாசிதான். சிதம்பரம் அனுப்பினுர் என்று சொல்லி யார் வந்தாலும் சரி, வந்தவருக்கு நல்ல மரியாதையும் கவனிப்பும் உண்டு.

சிதம்பரம் அனுப்பினுரா, ரொம்ப மகிழ்ச்சி. நீங்க, உங்க வியாபார விஷயம் முடியும்வரை, இங்கேயே தங்கிக் கொள்ளலாம்.'' என்ருர் சாந்தலிங்கம். கோணப்பன் உள்ளத்தில் ஒரே பூரிப்பு. வந்த காரியம் பாதிவரை வெற்றியாகிவிட்டது என நினைத்தான்.

சாந்தலிங்கம் சட்டையைக் கழட்டி, சுவரில் மாட்டிவிட்டு பனியனுடன் வந்து உட்கார்ந்தார். அப்போது சமையல்காரன் வந்து ''ஐயா இலை போட்டாச்சு'' என்ருன். அந்த வீட்டுச் செயல்கள் யாவும் குறிப்பு முறையில் இருந்தது. ''உம்......இதோ வர்ரேம்'' என்று சொன்ன சாந்தலிங்கம் கோணப்பனைப் பார்த்து ''எழுந்திருங்க சாப்பிடலாம்'' என்ருர். அந்த வாய்ப்பை எதிர்பாராத கோணப்பன் தயங்கியபடி குறுஞ் சிரிப்புடன் மெல்ல எழுந்தான்.

கோணப்பனுக்கும், சாந்தலிங்கத்துக்கும் ஒரே பக்கம் இலை போடப்பட்டிருந்தது. சாந்தலிங்கம் எவ்வளவோ வசதி படைத்த மனிதர். ஆனுலும் வந்தவர்க்கு வித்தியாசமான விருந்து கிடையாது. யாராயிருந்தாலும் அவர் சாப்பிடும் உணவே போடப்படும். எந்தவிதப் பாகுபாடும் அவரிடம் இல்லை. சுவையான உணவு இலையில் பரிமாறப்பட்டது. திருட வந்தவனுக்கு என்னென்ன உபசாரம் நடக்கிறது! என்று எண்ணிக்கொண்டே சாப்பிட்டான் கோணப்பன். குற்றமுள்ள நெஞ்சல்லவா? வேறு என்ன நினைவு வரும்.

சாப்பாட்டுக்குப் பிறகு சாந்தலிங்கம், கோணப்பனை அழைத்துக் கொண்டு, மேல்மாடிக்குச் சென்று ''கொஞ்சநேரம் படுங்களேன்'' என்ருர். உண்ட களைப்பு கொஞ்சம் படுக்கவேண்டும் போலிருந்தது. மெத்தை விரித்த கட்டிலில் போய் உட்கார்ந்தான் கோணப்பன். அடேயப்பா, என்ன சுகம்!


ஸ்பிரிங் கட்டில் ரொம்ப இதமாக இருந்தது. இன்னொரு கட்டிலில் சாந்தலிங்கம் உட்கார்ந்தார். அவர் கட்டிலுக்கு எதிர்ச் சுவரில் இரண்டு பெண்களின் புகைப்படம் இருந்தது. அவற்றைப் பார்த்த கோணப்பன். ''அந்தப் படத்தில் இருப்பவர்கள் யார்?'' என்று கேட்டான். சாந்தலிங்கம் சொன்னுர். ''ஒன்று என் தாய், மற்ருென்று என் தாரம்'' இதைச் சொல்லும்போது அவர் குரலில் வலிவு குறைந்தது. ''அந்த இரண்டு பேரும் இப்போது......'' என்று ஐயப்பாட்டோடு வார்த்தையை நீட்டினுன் கோணப்பன். ''இல்லை ... காலமாகிவிட்டார்கள்.'' என்று அவனது ஐயத்தை நீக்கினுர் சாந்தலிங்கம். அதோடு அவர் பேச்சை நிறுத்திக் கொள்ளவில்லை. தொடர்ந்து பேசினுர் ''என் தாய் என் திருமணத்துக்கு முன்பே இவ்வுலகை விட்டுப் போய்விட்டார்கள். என் மனைவி மணம் முடித்து ஒரே ஆண்டில் காலமானுள்'' என்று சிறு குழப்பத்தோடு சொன்னுர்.

அவருக்கு இப்போது ஐம்பது வயதிருக்கும். இளமையிலேயே மனைவியை இழந்த அவர், இரண்டாவது திருமண்ம் செய்திருக்கலாம்! ஆனுல் செய்யவில்லை.

அதற்கான காரணத்தையும் கோணப்பன் கேட்டான். சாந்தலிங்கம் மிக நிதானமாகச் சொன்னுர். ''இரண்டாவது திருமணத்தில் எனக்கு விருப்பமில்லை. முதல் மனைவியின் அன்பு என்னை ரொம்பக் கவர்ந்தது. அவளோடு உறவாடிய என் இதயம் மற்ற எந்தப் பெண்ணேடும் உறவாட விரும்பவில்லை. இதுதான் காரணம்'' என்ருர்.

எவ்வளவு வெள்ளையாகப் பேசுகிருர் மனிதன். கோணப்பனுக்கு ரொம்ப அதிசயமாகவே இருந்தது. ''தூக்கம் வந்தால் தூங்குங்களேன்'' சாந்தலிங்கம் சொன்னுர். உட்கார்ந்திருந்த கோணப்பன் அப்படியே கட்டிலில் சாய்ந்தான். உறக்கம் ஆனந்தமாக வந்தது.

பிற்பகல் நான்கு மணி. தூங்கி எழுந்தான் கோணப்பன். சாந்தலிங்கம் ஏதோ படித்துக் கொண்டிருந்தார். ''நீங்க தூங்கலையா?'' கோணப்பன் கேட்டான். ''எப்பவும் பகலில் தூங்கமாட்டேன்'' என்ருர் சாந்தலிங்கம். அப்போது சமையல்காரன் வந்தான். 'என்ன மாணிக்கம் வெந்நீர் போட்டியா?'' என்று சமையல்க்காரனிடம் சாந்தலிங்கம் கேட்டார். ''ஆமாங்க ஐயா''



மாணிக்கம் பணிவாகச் சொன்னான். "போய்க் குளிச்சிட்டு வந்திடுங்க" என்று கோணப்பனுக்குச் சொன்னார் சாந்தலிங்கம். இரவு எத்தனை மணிக்குத் திருடலாம்? என்ற சிந்தனையிலிருந்த கோணப்பன், திடீரென்று உணர்வு பெற்றாலும் அதை வெளிக்காட்டாமல் "இதோ போய்க் குளிக்கிறேன்" என்றான்.

அவன் குளித்துவிட்டு வந்தான். படித்துக்கொண்டிருந்த சாந்தலிங்கம் "இருங்க, நான் குளிச்சிட்டு வந்திடறேன்" என்று கோணப்பனிடம் சொல்லிவிட்டு அங்கேயே புத்தகத்தை வைத்துவிட்டுப் போனார். அது மிகச்சிறிய புத்தகம் தான். கோணப்பன் அதைஎடுத்துப் பார்த்தான். அது திருக்குறள் புத்தகம். இரண்டொரு பக்கங்களைப் புரட்டிவிட்டு அப்படியே கீழே போட்டு விட்டான். அவனுக்கும் அதற்கும் வெகுதூரம் போலிருக்கிறது.

சாந்தலிங்கம் குளித்துவிட்டு மாடிக்கு வந்தார். மாணிக்கம் அவர் பின்னாலேயே வந்து "ஐயா சின்னப்பன் வந்திருக்கான்" என்றான். "அவனைக் கீழே இருக்கச்சொல்லு. இதோ வர்றேன்" என்று சொன்ன சாந்தலிங்கம், கட்டில் மீது கிடந்த குறள் புத்தகத்தை எடுத்து ஒரு பீரோவைத் திறந்து வைத்தார். அவர் பீரோவைத் திறக்கும்போது கோணப்பன் அதை உற்றுப்பார்த்தான். பீரோ முழுவதும் ஒரேபுத்தகமாக இருந்தது. அங்கேதான் பணம் இருக்குமோ என்று எண்ணிய கோணப்பன் பெரிய ஏமாற்றத்துக்குள்ளானான். சாந்தலிங்கம் பீரோவை மூடிவிட்டு கோணப்பனைப் பார்த்து" வாங்க கீழே போலாம். நம்ம பங்களாவின் அறைகளை யெல்லாம் பாருங்க" என்றார்.

ஏமாற்றத்தோடு ஏங்கியகோணப்பனுக்கு, சாந்தலிங்கம் சொன்னது நல்ல வாய்ப்பாகிவிட்டது பணப் பெட்டி இருக்கும் இடத்தை அறிய இனியென்ன தடை? சாந்தலிங்கமும், கோணப்பனும் கீழே வந்தார்கள். முன்ஹாலில் ஒருவன் நின்றிருந்தான். அவனைப்பார்த்த சாந்தலிங்கம் "என்ன சின்னப்பா, ஐயா அனுப்பினாரா?" என்றார். 'ஆமாங்க' என்றான் சின்னப்பன். "எவ்வளவு பணம் வாங்கிட்டு வரச்சொன்னாரு?" சின்னப்பன் வந்தநோக்கம் பணத்துக்குத்தான் என்பது, ஏற்கனவே சாந்தலிங்கத்துக்குத் தெரியும். "ரெண்டாயிரம்" என்றான் சின்னப்பன். "சரி உட்கார்" என்று சொன்ன சாந்தலிங்கம் கோணப்பனுடன் உள் அறைகளுக்குச் சென்றார்.

பூஜை அறையிலிருந்து விருந்தினர் சாப்பாட்டறைவரை மொத்தம் எட்டு அறைகள் கீழே இருக்கிறது. எல்லா அறைகளையும் கோணப்பன் நன்றாகவே கவனித்தான். எட்டாவது அறைக்குள் நுழைந்ததும் "இது தான் நம்ம கஜானா" என்றார் சாந்தலிங்கம். கோணப்பனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அங்கேதான் பணம் இருக்கிறது என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டான்.

பணப் பெட்டியைத் திறந்தார் சாந்தலிங்கம். பெட்டிக்கு பலமான பூட்டு எதுவும் போடவில்லை. பெட்டியின் மேல் தட்டில் பண நோட்டுக்கள் கத்தை கத்தையாக அடுக்கப்பட்டிருந்தது. கீழ்த்தட்டில் வெள்ளிப்பாத்திரங்கள் இருந்தது. அதற்கும் கீழே தங்க நகைகள் இருந்தது. அவைகளையெல்லாம் வாரிச் சுருட்டிக்கொண்டு எந்த வழியில் போனால் சுலபமாகத்தப்பலாம் என்று 'பிளான்' போட்டுக் கொண்டிருந்தான் கோணப்பன். 'இந்தாங்க இதைப்பிடியுங்க" என்ற சாந்தலிங்கம் ஐந்து ரூபாய்நோட்டுக்கள் அடங்கிய நானகு கட்டுகளை கோணப்பனிடம் நீட்டினார் அவன் அதை வாங்கிக் கொண்டான். சாந்தலிங்கம் பணப்பெட்டியைப் பூட்டிவிட்டு 'சின்னப்பன்னு ஒருத்தன் வந்திருக்கானே அவன் மண்டிக்கடை மருதாசலத்து ஆளு. காலையிலேயே மருதாசலம் போன் செய்தார். ரெண்டாயிரம் ரூபா பணம் வேணும்னு. நான்தான் நாலு மணிக்கு வரச்சொன்னேன்" என்று சின்னப்பனைப் பற்றியும் கோணப்பனிடம் சொல்லிவிட்டு "இப்படித் தாங்க" என்று அவன் கையிலிருந்த பணக்கட்டுகளை வாங்கிக் கொண்டு "வாங்கபோய் டிபன் சாப்பிடலாம்" என்றார். கோணப்பனும் அவர் பின்னாடியே சென்றான். அவன் நினைவெல்லாம் சதித்திட்டத்திலேயே இருந்தது

பளபளக்கும் சில்வர் தட்டுக்களில் சிற்றுண்டி உணவு மணம் வீசிக்கொண்டிருந்தது. அந்த மணம் கோணப்பனுக்கு உமிழ்நீரைச் சுரக்கவைத்தது கையிலிருந்த பண நோட்டுக்களை பக்கத்து ஸ்டூலின் மீது வைத்து விட்டு, "மிஸ்டர் கோணப்பன் உட்காருங்க சாப்பிடுவோம்" என்று சொல்லிக்கொண்டே சாந்தலிங்கம் உட்கார்ந்தார். கோணப்பனும் உட்கார்ந்தான். இருவரும் சாப்பிடத் துவங்கினார்கள். வாழைப்பழம், அல்வா, கிச்சடி, பூரி, வெங்காயவடை எல்லாமே ருசி ருசியாக இருந்தது. கோணப்பன் ரொம்ப நிதானமாகவே சுவைத்துச் சாப்பிட்டான். மாணிக்கம் காபி கெட்டிலுடன் வந்தான். அவனைப் பார்த்த சாந்தலிங்கம் அல்வா துண்டை வாயில் போட்டுக் கொண்டே "மாணிக்கம், ஹாலிலே சின்னப்பன் இருக்கான். அவனுக்கு ஒரு டம்ளர் காபி கொடுத்து, இதோ இந்தப் பணத்தையும் கொடுத்து அனுப்பிச்சுடு" என்று ஸ்டூல் மீதிருந்த பணத்தைக் காட்டினார். ஒரு டம்ளர் காபியுடன் பணத்தை எடுத்துக்கொண்டு மாணிக்கம் சின்னப்பனிடம் போனான்.

சிற்றுண்டியைச் சுவைத்துக் கொண்டிருந்த கோணப்பன் தலையை நிமிர்த்தி சாந்தலிங்கத்தைப் பார்த்தான். அவர் குனிந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் தான் எவ்வளவு களை ததும்புகிறது. நரையோடிய தலையென்றாலும் அதில்தான் எவ்வளவு அறிவு. எல்லாவற்றிலும் ஒரே நிதானம். சின்னப்பனை மறந்து விடாமல் அவனுக்கும் காபி கொடுக்கச் சொன்னாரே. முதலில் பணத்தைக் கொடுத்தால் போய்விடுவான் என்று தான் காபியுடன் சேர்த்துக்கொடுத்தாரோ? பண்பும், பாசமும் இந்த வீட்டின் உடன் பிறப்பா? "என்ன மிஸ்டர் கோணப்பன் சாப்பிடாமெ யோசனை?" சாந்தலிங்கத்தைப் பற்றிய சிந்தனையில், சாப்பிடுவதையே மறந்து விட்ட கோணப்பன் அவர் தந்த குரல் ஒலியால் சுய நினைவுக்கு வந்தான். 'ஓ!...... யோசனை......ஆமா......" என்று சிரித்தான். சாந்தலிங்கமும் சிரித்துக் கொண்டார்.

சில சமயங்களில் இப்படித்தான். ஒருவரோடொருவர் அளவளாவும் போது காரணத்தோடு சிரிப்பதைப் போலவே காரணம் புரியாமலே சிரிப்பதும் உண்டு. அப்படித்தான் சாந்தலிங்கமும் சிரித்துக்கொண்டார். அது வெள்ளை உள்ளங்களின் இயல்போ?

மணி ஐந்து.

வெப்பத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்த வெய்யில் தணிந்து குளிர்ச்சியான மஞ்சள் வெய்யிலாக மாறியது. கோணப்பன் வெளியே கிளம்பினான். அவனோடு சாந்தலிங்கம் போகவில்லை. 'நீங்க வாக்கிங் போயிட்டு வாங்க நான் தோட்டத்துப் பக்கம் போறேன்" என்று

சொன்ன சாந்தலிங்கம் கோணப்பனை வெளியே அனுப்பிவிட்டு பங்களாவின் பின் புறத் தோட்டத்துக்குச் சென்றார். அவர் எப்போதும் மாலை நேரங்களில் தோட்ட வேலையில் ஈடுபடுவார். அது அவருக்குப் பிடித்தமான ஒன்று.

இரவு மணி எட்டிருக்கும்.

வெளியில் போயிருந்த கோணப்பன் திரும்பிவந்தான். அவன் பணத்தைக் கொள்ளையடிப்பதற்கு, இன்னும் சில மணி நேரங்கள்தானே இருக்கிறது. அவன் இவ்வளவு தூரம் சாந்தலிங்கத்திடம் உறவாடி நம்பிக்கை ஊட்டியதெல்லாம் எதற்கு. மருதமுத்து சொன்னபடி பணங்களைத் திருடத்தானே! பாவம் சாந்தலிங்கம். அவருக்குத்தான் எதுவும் தெரியாதே. அவனைத்தான் முழுக்க முழுக்க நம்பிவிட்டாரே. பாங்கான விருந்துமல்லவா செய்கிறார்.

இரவு விருந்து பிரமாதமாக நடந்தது.

மேல்மாடியில் படுக்கை போடப்பட்டது. சாந்தலிங்கமும், கோணப்பனும் உறங்கச் சென்றார்கள். மாடியில் தூங்கப்போனது கோணப்பனுக்கு அவ்வளவாக இஷ்டமில்லை. பணப்பெட்டி இருப்பதோ கீழே. மாடிப்படி இறங்கிச் செல்லும்போது சிறு சத்தம்கூட பெரிதாகிவிடலாம் என்ற கவலைதான் கோணப்பனுக்கு. ஆனாலும் என்ன செய்வது. நான் தனியே படுத்துக்கொள்கிறேன் என்று சாந்தலிங்கத்திடம் சொல்ல முடியும ?

நள்ளிரவு நேரம்.

ஆந்தைபோல விழித்துக் கொண்டே இருந்த கோணப்பன், லேசாகத் தலையைத் தூக்கி சாந்தலிங்கத்தைப் பார்த்தான். அவர் ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தார். மங்கலான மின்சார ஒளியில் அவர் முகம் தெளிவாகத் தெரிந்தது. கோணப்பனின் இதயத்தில் எத்தனையோ சிந்தனைகள் குறுக்கும் நெடுக்குமாக இழை போடத் துவங்கியது. அந்த இழையோட்டத்தில் சாந்தலிங்கமும் மருதமுத்துவும் மாறி மாறித் தோன்றி மறைந்தார்கள்.

நீதியோ, அநீதியோ மருதமுத்து விருப்பம்போல சாந்தலிங்கம்போய், சாட்சி சொல்லி இருக்கவேண்டும். அதைச் செய்திருந்தாரானால் அவரைத் தேடி கோணப்பன் வந்திருக்க மாட்டான். கொள்ளையடிக்கவேண்டிய நிர்ப்பந்தமும் இல்லை. மருதமுத்து போன்ற ஆட்கள் வாழும் சமுதாயத்தில் சாந்தலிங்கம் போன்றவர்கள் வாழவேண்டியதே இல்லையோ? படுக்கையைவிட்டு மெல்ல எழுந்தான் கோணப்பன். ரொம்ப நிதானமாக படி இறங்கிக் கீழேபோனான், 'தடக்' அப்பா, கால் இடறிவிட்டதே. என்றாலும் அவன் விழுந்துவிடவில்லை. கால் ஏன் தடுமாறியது? மனதில் உண்டான படபடப்பா. அல்லது சிந்தனையின் பேரால் ஏற்பட்ட கவனக்குறைவா? இதற்கெல்லாம் அவன் விளக்கம் காணவில்லை. பணப்பெட்டி இருக்கும் அறையை நோக்கி எலி பிடிக்கும் பூனைபோல நடந்தான். அங்கே ஒரு மூலையில் மாணிக்கமும் தூங்கிக் கொண்டிருந்தான். அவனைப்பார்த்துவிட்ட கோணப்பன் சிறிது தயங்கி நின்று, மீண்டும் நடந்தான்.

பொழுது விடிந்தது சாந்தலிங்கம் படுக்கையைவிட்டு எழுந்தார். கோணப்பனின் கட்டில் காலியாக இருப்பதைக்கண்டார். அதே சமயம் மாணிக்கம் ஓடிவந்தான். "ஐயா பணப்பெட்டி திறந்து கிடக்கு" என்று பட படப்போடு சொன்னான். "பணப்பெட்டியா?" சாந்தலிங்கத்தின் குரலில் ஏமாற்றம். அச்சம், வினா இவ்வளவும் ஒருங்கே வெளிப்பட்டது "ஆமாங்க!" மாணிக்கம் வேதனையோடு சொன்னான் "கோணப்பன் எங்கே?" சாந்தலிங்கம் கேட்டார் "அவர் இங்கே இல்லீங்களா?" என்று கேட்டுக்கொண்டு கோணப்பனின் கட்டிலைப் பார்த்தான் மாணிக்கம். "ஆளையே காணோமே" சாந்தலிங்கம் சொல்லிக்கொண்டே கீழே போனார். மாணிக்கமும் பின் தொடர்ந்தான். பணப்பெட்டி இருக்கும் அறைக்குள் நுழைந்தார் சாந்தலிங்கம். பெட்டி திறந்துகிடப்பதைக் கண்டார். அங்கே—பணக்கட்டுகள் கலையாமல் இருந்தன. பெட்டியின் கீழ்த்தட்டை நோக்கினார். அங்கே-வெள்ளிப் பாத்திரங்கள் கலையாமல் இருந்தன. அதற்கும் கீழே-தங்க நகைகள் வைத்தது வைத்தபடியே இருந்தது. அதோடு — ஒரு கடிதமும் மடித்து வைக்கப்பட்டிருந்தது. சாந்தலிங்கம் அதை எடுத்துப் பார்த்தார். அதில்:

சாந்தமே உருவான சாந்தலிங்கம் அவர்களுக்கு கோணப்பன் வரைந்த மடல்.

ஐயா, பல குழப்பத்துக்குப் பின் இக்கடிதம் எழுதினேன். நான் உங்களைத் தேடிவந்தது, விருந்துண்டது—அவ்வளவும் பெரிய சதியுடன்தான். நீங்கள் அதை அறியமாட்டீர்கள். பாலில் கறையோ களங்கமோ இருப்பதில்லை. உங்கள் இதயமும் அப்படிப்பட்டதுதான்.

நான் ஒரு திருடனாக உங்கள் வீட்டுக்கு வந்தேன். அதுவும் மருதமுத்துவின் தூண்டுதலால். சிதம்பரம் அனுப்பியதாக பெரிய பொய் சொன்னேன். உங்கள் வீடு தெய்வம் வாழும் கோயில். அதை ஒரே நாளில் அறிந்துகொண்டேன். நீங்கள் எனக்குச் செய்த அன்பும், விருந்தும்—என் முரட்டு இதயத்தில் கூட நன்றியை உண்டாக்கிவிட்டது. என் மனச்சாட்சி என்னைத் திருடவிடவில்லை. பிறகு நான் எப்படித் திருட முடியும். உங்கள் விருந்துக்கு நன்றி. என் அறியாமையை மன்னித்துவிடுங்கள்.

இப்படிக்கு,
கோணப்பன்.

சாந்தலிங்கம் அந்தக் கடிதத்தை கொஞ்சம் சத்தமாகவே படித்ததால் மாணிக்கத்துக்கு எல்லா விஷயமும் புரிந்தது. "ஐயா போலீசுக்குத் தெரியப்படுத்துவமா?" என்று மாணிக்கம் கேட்டான். "வேண்டாம், அவன்தான் குற்றத்தை உணர்ந்துவிட்டானே" என்று சாந்தலிங்கம் சொல்லிக்கொண்டே—அந்தக் கடிதத்தைச் சுக்கலாகக் கிழித்தெறிந்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின், வழக்கம்போல காலையில் பத்திரிகை பார்த்துக்கொண்டிருந்தார் சாந்தலிங்கம். அதில் ஒரு செய்தி அவருக்கு ஆச்சரியம் கொடுத்தது. அந்தச் செய்தி இதுதான். 'மலையூர் மருதமுத்து வீட்டில் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. போலீஸ் தீவிரமாகக் கள்ளனைத் தேடுகிறது' இதைப் படித்த சாந்தலிங்கம்—ஏதோ சிந்தனையில் தன்னை மறந்துவிட்டிருந்தார்.

★

## விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் அக்டோபர் மாத பட்டியல் அனுப்பப்பட்டுஉள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
'காஞ்சி'

# பல்லாண்டு வாழ்க!



கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்

மேல்நாட்டில் காரல்மாக்ஸ், ரூசோவும்
வால்டேரும் புரட்சி விம்மக்
கால்நாட்டி ஞரென்ருல் இந்நாட்டில்
பகுத்தறிவுக் கருத்தை நாட்டி
மால்காட்டும் குலசமயப் புரட்டெல்லாம்
மறைதற்கு மறும லர்ச்சிப்
பால்ஊட்டும் பேரறிஞன் அண்ணுவின்
இணையில்லாப் பணியே வாழி!

கச்சியிலே தோன்றியவன்; கலையறிவு
சான்றசுவைக் கருத்தை யெல்லாம்
அச்சமிலாச் செந்தமிழில் அடுக்குமொழி
யாற்பொழிவான்; எதிர்ப்புக் காணின்
துச்சமெனத் தள்ளிடுவான் மாற்றலரின்
பாராட்டும் சூடிக் கொள்வான்;
எச்சுவையும் பொங்கியெழ எழுத்தாளும்
அண்ணுவின் ஏற்றம் வாழி;

வடிவத்தில் குறள்மாண்பன்; இலைமெல்லும்
செவ்வாயன்; மதுகை ஊட்டும்
பொடிவைத்துப் பேசுபவன்; புத்துலகச்
சிற்பி; தமிழ்ப் புலமைச் சின்னம்
நடிகர்க்கு நடிகனவன், நாடகங்கள்
அமைப்பதிலோ பெர்னுட் ஷாவே!
கீடிதலிலும் அண்ணுவின் சொற்கனிவின்
கவர்ச்சியினைக் காண லாமே!

முப்பதுநல் ஆண்டின்முன் முதன்முதலில்
அண்ணுவின் முழக்கம் கேட்டேன்
இப்பொழுதும் பேரறிஞன் எழுச்சிதரும்
பேச்சினிலே இனிமை துள்ளும்;
எப்பொழுதும் இனிமைக்கோர் இலக்கியமாய்
இலங்குவன அண்ணு நூல்கள்!
ஒப்பரிய முதலமைச்சன்; உயிர்க்குலத்தின்
தனித்தலைவன் அண்ணு வாழ்க!

இக்காலம் தமிழுக்கு நற்காலம்
ஆட்சியிலே எங்கள் அண்ணு
'எக்காலும் தமிழ்காப்பேன்' எனும்உறுதி
ஏத்துகிருன்; இனியும் நாட்டு
மக்களது வதனத்தில் வாட்டமதைப்
பார்த்திருக்க மாட்டான் என்று
திக்கெல்லாம் தென்னுட்டின் சிறப்போங்கச்
செய்கின்ற செம்மல் வாழி!

வருங்கால அகராதி 'அண்ணு' இன்
சொல்லுக்கே 'அறிஞன்' என்று
பொருள்கூறும் புகழ்ஏறும் புத்துலகச்
சிற்பியினைப் போற்று கின்ருேம்!
இருள்சூழும் சமுதாயப் பிணிதீர்க்கும்
மருத்துவனும் எங்கள் அண்ணு
திருமேனிப் பிணிநீங்கித் திரும்பியதால்
களிப்பினிலே திளைக்கின் ருேமே!

எல்லார்க்கும் நல்லவனும் அண்ணுவின்
இடர்நீக்கி அமெரிக் காவில்
மில்லர்எனும் மருத்துவனர் வெற்றிக்குப்
பாராட்டு; மேதை அண்ணு
பல்லுயிரும் வாழ்த்தெடுக்கப் பகுத்தறிவின்
மறுபிறப்பாய் பறந்து வந்து
பல்லாண்டு வாழ்கவெனப் பிறந்தவிழாத்
தொடர்வாழ்த்துப் பாடு வோமே!

வள்ளுவரின் நுண்ணறிவு; புத்தரது
தண்கருணை; மதுவி லக்குக்
கொள்கையிலே காந்திநெறி; குடியரசில்
லெனின்பாதை; கோதில் லாத
உள்ளமதில் பெருந்தன்மை; ஒப்புரவு;
சீர்திருத்தம், உரிமை வேட்கை;
வள்ளன்மை அத்தனையும் வடிவான
அண்ணு! நீ வாழ்க! வாழ்க!

சோவியத் ருஷியாவில் நடந்ததுதான் இப்புரட்சி 50 ஆண்டுக்கட்கு முன்பு—
இன்று, இந்தியாவும் அந்த நிலையில்தான் என்று இணைத்துக்கொண்டால்......

# அக்டோபர் புரட்சியும் இளைஞர் கடமையும்

இன்று இளைஞர்களை ஆயிரக்கணக்கான சிக்கல்கள் எதிர்நோக்கியிருக்கின்றன. எதிர்கால உலகின் முழு உரிமைகளையும் தங்களிடத்தே கொண்டுள்ள இளைஞர்கள் ஒளிமயமான எதிர்கால வாழ்வுக்குப் பல தடைகளைக் கடந்து முன்னேற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றப்பாதையில் பற்பல தடைச்சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன படுகுழிகள் வெட்டப்பட்டிருக்கின்றன. கல்லும் முள்ளும் குவிக்கப்பட்டிருக்கின்றன. இவை யாவற்றையும் கடந்துசெல்ல வேண்டிய கட்டத்தில் இளம் தலைமுறையினர் வளர்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் நமது கடமை என்ன? இளைஞர்களுடைய கடமைகள் இன்று நீண்டு கிடக்கின்றன, செயல் திறமும் செயல் ஊக்கமும் நிறைந்திருக்கும் இளைஞர்கள் இப்பொழுது தங்களுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க கடமைகளையும் பணிகளையும் ஆற்றுவதில் தயக்கமின்றி, தூக்கமின்றி ஈடுபட்டு வருகின்றார்கள். அக்டோபர் புரட்சியின்வியப்புமிக்க வெற்றியும் அதனைத் தலைமையேற்றுப் பெற்றுக்கொடுத்த மேதை லெனின் கற்றுக்கொடுத்தகொள்கை நெறியும் பெரும் பொறுப்புகளை ஏற்றுச் சுமந்துகொண்டு செயல்படத் துடித்துக்கொண்டிருக்கின்ற இளைஞர் பெரும் படைக்குத் துணையாகவும் தூண்டுகோலாகவும்வழிகாட்டியாகவும் இருக்கின்றன. அக்டோபர் புரட்சி என்னும் அடித்தளத்தின் மீது எழுப்பிய சோசலிச மாளிகையிலே சோவியத் இளைஞர்களும் மாணவர்களும் ஈட்டியிருக்கின்ற வெற்றியும் பெற்றிருக்கின்ற பயன்மிக்க சிறப்புகளும் மற்றைய நாட்டுப் புதிய தலைமுறைச் சிறப்புகளுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமைந்திருக்கின்றன.

அக்டோபர் புரட்சி கூலி உயர்வுப் போராட்டமோ வெறும் அரசியல், பொருளாதாரக் கோரிக்கைகளைமுன் வைத்து நடத்தப்பட்ட போராட்டமோ அல்ல. அல்லது குறிப்பிட்ட பகுதி மக்களுக்கென்று அதாவது தொழிலாளி மக்களுக்கு மட்டுமோ, விவசாயிகளுக்கு மட்டுமோ, பெண்களுக்கு மட்டுமோ, இளைஞர்களுக்கு மட்டுமோ நடத்தப்பட்ட போராட்டம் அல்ல. அக்டோபர் புரட்சி ஒரு சோஷலிஸ்ட் புரட்சியாகும். தொழிலாளி வர்க்கத்தின் சிறப்புமிக்க சக்தியையும் தனித் தன்மையையும் வரலாற்றுப் புகழ்மிக்க பங்கையும் ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய தலைமையில் எல்லாப் பகுதி மக்களாலும் அனைத்து நலன்களையும் முன்னேற்றத்தையும் கொண்ட புதிய சமுதாயமொன்றைக் காண்பதற்காகநடத்தப்பட்ட சோஷலிஸ்ட் புரட்சிதான் அக்டோபர் புரட்சியாகும். அதனால்தான் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றி எல்லாப் பகுதி மக்களுக்கும் மாபெரும் வெற்றியாக அமைந்தது. தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள் மாணவர்கள், முதியவர்கள், அறிவாளிகள் யாவரும் இதனால் பயன் பெற்றதோடு யாவரும் இணைந்து ஒன்றுபட்டுத் தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தை அமைப்பதற்கும் கம்யூனிசத்தைக் கட்டுவதற்கும் செயல்பட்டு வருகின்றார்கள்.

அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கு இளைஞர்களும் மாணவர்களும் மிகுந்த அளவில் துணை நின்றார்கள். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் நடத்தப்பட்ட புரட்சியாயினும் அவர்கள் போராட்டத்தில் முழுச் சக்தியுடனும் கலந்துகொண்டார்கள். புரட்சி வெற்றி பெறவும் புதிய பாட்டாளிகள் அரசு அமையவும் இளைஞர் மாணவர்களுடைய பங்கும் பணியும் மிகப் பெரியது. அவர்களுடைய சக்தியையும் வேகத்தையும் ஆவலையும் புரட்சி வீரர் லெனின் மிகுந்த கவனத்துடன் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டார். அவர்களுடைய பங்கைச் சிறுமைப்படுத்தாமல் புரட்சி வீரர் லெனின் புரட்சியின் வெற்றிக்கு அவர்கள் பணிகளை ஏற்றுக்கொண்டார்.

சோவியத் நாட்டின் தொழிலாளி வர்க்கத்திற்கு சோஷலிச நாடுகளின் தொழிலாளி வர்க்கத்திற்கும் கம்யூனிசத்தைக் கட்டுவதற்கும் சோஷலிசத்தை அமைப்பதற்குமான பணிகள் இருப்பது போலவே அந்த நாட்டு இளைஞர்களுக்கும் அந்தப் பணிகள் இருக்கின்றன. சோஷலிச, கம்யூனிச அமைப்பு வேலைகளில் அந்த நாட்டு இளைஞர்களும் மாணவர்களும் அறிவாளிகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றார்கள். இந்தப் பணிகளை சோவியத் நாடு மற்றும் பிற சோஷலிச நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களும் மாணவர்களும் தங்களுடைய மிக முக்கியமான கடமைகளாகக் கருதுவதோடு மகிழ்ச்சியுடன் தங்கள் கடமைகளைச் செய்தும் வருகின்றார்கள்.

அதுபோலவே சோஷலிச நாடுகளல்லாத பிற நாடுகளில் உள்ள இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரும் பணிகள் இருக்கின்றன. பொருளாதார, அரசியல் விடுதலைக்காகவும் சுரண்டலற்ற அடிமைத்தளைகளற்ற சமுதாயம் காண்பதற்காகவும் வாழ்வையே முன்வைத்துப் போராடுகின்ற தொழிலாளர்கள், விவசாயிகள், பாட்டாளிகள் ஆகியவர்களோடு ஒத்துழைப்பதே, அவர்களுடன் சேர்ந்து போராடுவதே அந்தப் பணிகள் ஆகும், உழைக்கும் மக்கள் நடத்துகின்ற எந்தப் போராட்டமும் மக்களினத்தின் மொத்த விடுதலைக்கான போராட்டமாகும். ஆகவே அதில் கலந்துகொண்டு அந்தப் போராட்டங்களையெல்லாம் வெற்றி பெறச் செய்ய வேண்டியது சமுதாயத்திலுள்ள அனைத்து பகுதி மக்களின் சமுதாயக் கடமையாகும். இதில் மாணவர்களும் இளைஞர்களும் இணைந்து, முனைந்து நிற்கவேண்டியது மிகவும் அவசியமென்பதில் ஐயமில்லை.

அக்டோபர் புரட்சியின் வெற்றி மாளிகையில் குடியிருக்கின்ற சோவியத் நாட்டு இளைஞர்களுக்கும் பிற நாட்டு இளைஞர்களுக்கும் இருக்கின்ற வேறுபாடுகளை நாம் கூர்மையான அறிவோடு கவனிக்க வேண்டும். சோவியத் இளைஞன் அறிவியல் வளர்ச்சியின் மொத்தப் பயனையும் எடுத்துக்கொண்டு மேலும் மேலும் புதியவற்றை நாடி முன்னேறிக்கொண்டிருக்கின்றான். கம்யூனிச சமுதாயத்தினைக் கட்டுவதற்கான எல்லா அடிப்''படைத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதில் வெற்றி கண்டு கொண்டிருக்கின்

றான். அவன் யாராலும் யாருடைய நலனுக்காகவும் சுரண்டப்படுவதில்லை. ஆனால் இந்திய இளைஞனை எடுத்துக்கொண்டால் அவன் படுகின்ற துன்பங்கள் சிறிதல்ல. கல்வியை முடிப்பதற்கே அவனால் முடிவதில்லை. கல்வி யமைப்பே உலுத்துப்போன பழமைமுறையைக் கொண்டது, அதைக் கற்பதற்கும் வேண்டிய வாய்ப்புகள் இல்லை. அத்தோடு உடன் தொடர்ந்து கொண்டிருக்கின்ற வாழ்க்கைப் பிரச்சினை அவனைசீர்கேட்டுக்குள்ளாக்கி விடுகின்றது. அவன் விரைவில் முதலாளி ஒருவனுடைய சுரண்டலுக்கு ஆட்பட்டுவிடுகின்றான்.

இந்திய இளைஞன் அல்லது மாணவன் (சோஷலிச நாடுகள் அல்லாத பிறநாட்டு இளைஞர்கள் அல்லது மாணவர்களுடைய பொதுவான பிரச்சினை இது) தான் விரும்புகின்ற பாடத்தைக் கட்டாயமாக எடுக்க இயலாதவனாக இருக்கின்றான். மிகுதியான வருவாய்க்காக மருத்துவம் போன்ற துறைகளுக்குச் செல்ல பெற்றோரால் கட்டாயப்படுத்தப்படுகிறான் அவன். திறமையிலிருந்தும் செல்வாக்கு மிக்கவர்களின் உதவியில்லாமல்தான் விரும்பிய துறைக்குச் செல்ல இயலாதவனாகிவிடுகிறான், அல்லது பொருளாதார நெருக்கடியினால் கல்வியையே தொடர இயலாதவனாகிவிடுகிறான். இந்தியாவில் பொருளாதாரம், வரலாறு, தத்துவம் இலக்கியம் நுண்கலைகள் போன்ற துறைகள் கேலிக்குரிய துறைகளாகிவிட்டன. ஏனென்றால் இந்தத் துறைகளில் பட்டம் பெற்றவர்கள் மிகுதியாக இருப்பதோடு இதை எடுத்துப் படித்தவர்கள் அதிகமாகப் பொருளீட்ட முடியாது என்று எல்லோரும் தவறாகக் கருதுகின்றார்கள். ஆனால் சோவியத் நாட்டிலோ பிற சோஷலிச நாடுகளிலோ இந்தச் சிக்கலே இல்லை, ஏனென்றால் அங்கு எதுவும் பணத்தைக்கொண்டு மதிப்பிடப்படுவதும் இல்லை. எந்தத் துறையும் இழிவாகக் கருதப்படுவதும் இல்லை. அங்கு எல்லாத் துறையில் பயிலுவோருக்கும் நடைமுறைக் கல்வி புகட்டப்படுவதால் அனைவரும் சமுதாயத்திற்குத் தேவையுள்ளவர்களாகவும் எல்லோரும் சம தகுதி உடையவர்களாகவும் இருக்கின்றார்கள். இதனால் எந்த சோவியத் இளைஞனும் தான் விரும்பிய துறைக்குத் தயக்கமின்றிச் செல்ல முடிகின்றது. தான் விரும்பிய துறைக்குச் செல்லுவதனால் அதில் முழுமைபெற்று சிறம்புப் பெறவும் முடிகின்றது. ஆனால் இந்திய இளைஞன் விரும்பிய துறையைக் கட்டாயமாக ஒதுக்கவேண்டிய நிலையில் இருக்கின்றான். இந்த நிலையைத் தகர்த்தெறிந்து நடைமுறைக்கேற்ற கல்வி பெறவும் அதற்கேற்ற சுரண்டலற்ற சமுதாயம் காணவும் படை கிளர்ந்தெழவேண்டும்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு இளைஞர்களுடைய கல்வி பயன்படுமாறு மாற்றியமைக்கப்படுவதோடு நாட்டு மக்களின் உயிர்ப்போராட்டங்களை, அவர்களுடைய நடைமுறை வாழ்க்கையின் தன்மைகளை அவர்கள் அறியவும் வழிசெய்ய வேண்டும்.

'கல்வி, போதனை, பயிற்சி ஆகியவை பள்ளியோடு மட்டும் ஒட்டியவையாய், வாழ்க்கைப் புயலினின்று விலகி நிற்குமானால் அவற்றை நாம் நம்பக்கூடாது...... அறிவின் அடிப்படைகளையும் பொதுமைக் கருத்துக்களைச் சுயமாக ஆயும் திறமையையும் நமது பள்ளி இளைஞர்களுக்குக் கற்பிக்கவேண்டும். அது அவர்களைக் கல்வி பயின்றவர்களாக ஆக்கவேண்டும். மக்கள் பள்ளிகளில் பயிலும்போது சுரண்டுபவரிடமிருந்து விடுவிக்கும் போராட்டத்தில் அவர்களை ஈடுபடுத்தப் பள்ளி பயிற்றுவிக்கவேண்டும்,'' என்று லெனின் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இளைஞர்கள் பல ஆறுகளையே வழிமாற்றி இருக்கின்றார்கள். 1930ம் ஆண்டு சோவியத் அரசு விடுத்த அறைகூவலை ஏற்றுக்கொண்டு ஆயிரக் கணக்கான இளைஞர்கள் தெய்கா என்னும் பகுதிக்குச் சென்று பெரியதொரு தொழில், கலாச்சார கேந்திரத்தை அமைத்தார்கள். புகை வண்டி மூலம் அந்த இடத்தைப் பிற போக்குவரத்துப் பாதையுடன் இணைத்தார்கள். இந்த இளம் தலைமுறையினரின் இணையற்ற உழைப்பின் பெருமையைச் சிறப்பிக்கும் பொருட்டு அந்த இடத்துக்கு இளம் கம்யூனிஸ்ட் கழகத்தின் பெயரைக்கொண்டு 'காம்சொமால்ஸ்க்' என்று பெயரிடப்பட்டது. இளைஞர்களுக்கு இவ்வாறு வாய்ப்புகளைத் தருவதோடு பெருமைப் படுத்திச் சிறப்பிக்கின்றது சோவியத் அரசு என்றால் அதற்குக் காரணம் அக்டோபர் புரட்சி பெற்ற வெற்றியும் அதனால் சோஷலிசக் கொள்கை பெற்ற வீச்சுமேயாகும்.

இளைஞர்களைப் பற்றி வளர்ந்து வரும் புதிய தலைமுறையினரைப்பற்றி லெனின் தெளிவாகவும் சிறப்பாகவும் குறிப்பிட்டார்.

★★★★★★★★★★★★★★

## அறிவிப்பு

எதிர்பாராதவிதமாக இக்கிழமை இதழில் "ஒரே இரத்தம்" தொடர் கதை இடம்பெற முடியவில்லை. அடுத்த கிழமை முதல் தொடர்ந்து வெளிவரும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

★★★★★★★★★★★★★★

"நாம் போராடக் கற்றுக்கொண்டோம். வேகமாகக் கற்று வருகிறோம் நமது தந்தையாரை விடச் சிறந்த முறையில் போராடுகிறோம். நமது குழந்தைகள் இன்னும் சிறந்த முறையில் போராடுவார்கள். அவர்கள் உறுதியாக வெற்றி பெறுவார்கள்,'' என்று அவர் எழுதினார், மாணவர்கள்—இளைஞர்கள் போராட்டங்களிலிருந்து விலகி நிற்பவர்கள் அல்ல; போராடுபவர்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. இது நாள்வரை நடந்த போராட்டங்களிலிருந்து இளைஞர்கள்கற்றுக்கொண்ட பாடங்கள் பல. மாணவர்களும் இளைஞர்களும் உலகெங்கும் போர்க்கொடி உயர்த்தி வருகின்றார்கள். பிரான்சிலே மாணவர்களுடைய பேராட்டம் வரலாற்றின் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றது. கல்வித் திருத்தம் உள்ளிட்ட பல கொள்கைகளை அவர்கள் எடுத்துக் கொள்வதோடு தொழிலாளர்களுடைய போராட்டங்களில் இணைந்து ஈடுபட்டு வருகின்றார்கள்.

சுரண்டலற்ற, அடிமைத்தளைகளற்ற சமுதாயம் எவ்வளவு சிறப்பான வெற்றிகளை அடைந்துள்ளது என்பதையும் அதனால் இளைஞர்கள் எவ்வளவு பயன் பெற்றிருக்கின்றார்கள் என்பதையும் அக்டோபர் புரட்சியை வெற்றியுடன் நடத்திக் காட்டிய சோவியத் நாடு எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கின்றது.

இளைஞர்களும் மாணவர்களும் அனுபவம் குறைந்தவர்களாக இருந்தபோதிலும் சக்தி மிக்கவர்கள். எதையும் இளமை வேகத்துடன் எதிர்த்துப் போராடும் திறன் உடையவர்கள். அவர்களுடைய அனுபவக் குறைவையும் கல்விக் கடமையையும் எடுத்துக் கூறி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்று சிலர் 'அறிவு' புகட்டுகின்றார்

# இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

## இதுவும் தேர்தலுக்காகத்தானா!

இந்தியாவுக்கு சுமார் 127 கோடி பெறுமானமுள்ள உணவுத்தானியங்கள் அனுப்ப, அமெரிக்கா சம்மதித்து விட்டதாம்! இது, இந்தியாவின் உணவுக் கையிருப்பை உயர்த்திக்கொள்ளப் பெரிதும் உதவும் என்று அமெரிக்கா நம்புகிறதாம்! இந்த நம்பிக்கையின் கூடவே இன்னொரு நம்பிக்கையும் தொக்கி நின்றதாம்! உணவுத் தானியங்களின் விலை வெகுவாக வீழ்ச்சியடைந்து அதனால் விவசாயப் பகுதி மக்களது ஓட்டுக்களை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்ட ஹம்ப்ரே பெறமுடியாதிருந்த சங்கட நிலையும் நிவர்த்தியாகும் என்பதுதான் தொடர் நம்பிக்கையாம்! அப்படியும் ஹம்ப்ரே வெற்றிபெறயில்லை! எப்படியோ, தேர்தலைக் காரணம் காட்டியாவது உணவுப் பொருள் உதவி கிடைத்திருக்கிறது. இதுபோல் திட்ட முதலீட்டுக்காக பொருளுதவி செய்யும் பிரச்னையும் தேர்தல் விவகாரமாகி விட்டிருந்தால் அது இந்தியாவுக்குக் கொஞ்சம் நல்லதாக ஆகிவிட்டிருக்காதா என்று மனம் ஏங்கத்தான் செய்கிறது! என்றாலும் அது அமெரிக்கா ஆயிற்றே!

## செல்வாக்குதான் காரணமோ?

"பூட்டோ" என்பது இந்தியாவுக்கு ஐ. நா. மூலம் நன்கு பிரபலமான ஒரு பெயர். பாகிஸ்தான் வெளிநாட்டு விவகார அமைச்சராகப் பதவி வகித்திருந்தவர். அரசியலில் அதிகச் செல்வாக்கு பூட்டோவை, அதிபர் அயூப்கானின் அரசியல் எதிரியாகவே மாற்றிவிட்டது. இதன் காரணமாக பதவிவிலகிய பூட்டோ, ஏதோ அயல் நாடொன்றில் சிலகாலம் தங்கி இருந்து அமைதி பெற்றார். அவர் அமைதி பெற்றாரா? அல்லது ஆதரவு தேடினாரா என்பதெல்லாம் அயூப்கானுக்குக்கூட தெரியாத மர்மங்கள். சில காலத்துக்குப்பிறகு, பலமான ஒரு எதிர்க்கட்சிக்குத் தலைமை ஏற்க பூட்டோ ஆயத்தமாகிக் கொண்டிருப்பதாகச் செய்தி வந்து, பின் அடங்கி விட்டது. பூட்டோவின் செய்தி உலகுக்குத் தெரியாவிட்டாலும் உள் நாட்டுக்குக்கூடவா தெரியாமல் போகும்? இப்போது ஒரு செய்தி வந்திருக்கிறது. பூட்டோ மீது ஒரு ஊழல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக! பூட்டோவின் செல்வாக்கு மிகுதிக்கும், இந்த வழக்குக்கும் தொடர்பு உண்டோ இல்லையோ, பூட்டோவுக்கு இதன்மூலம் "பூட்டு"ப் போடப்பட்டு விட்டது மட்டும் உண்மைதான்! அடுத்த பொதுத் தேர்தலில் பூட்டோ அதிபர் அயூபை எதிர்த்து போட்டியிடுவதற்குதயாராகிக்கொண்டிருந்தாராம்! இப்போதைய இந்த வழக்கில் பூட்டோ தண்டிக்கப்பட்டு விட்டால், அப்புறம் அயூப்கான் தானே சண்டப் பிரசண்டனாக விளங்க முடியும்.

## எதிர்காலத் திட்டம் என்னவோ!

ஏழுமலையானுக்கு மட்டும்தான் தமிழக அரசின் பரிசுச் சீட்டின் மீது மோகம் என்று யாரும் கருதிவிடத் தேவையில்லை. தமிழ் நாட்டிலுள்ள சிறைக் கைதிகளுக்குக்கூட ஆசை வந்துவிட்டிருக்கிறது. இந்த ஆசை, சாதாரண கைதிகளைவிட ஆயுள் தண்டனைக் கைதிகளுக்குதான் அதிகமாக விருக்கிறதாம்! அரசாங்கம் இதற்கு அனுமதி அளித்திருப்பதனால் கைதிகளுக்குள்ளே இதற்கு போட்டாபோட்டி ஏற்பட்டிருப்பதாகச் சுவையான செய்தி தந்திருக்கிறார்கள். போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொரு வரிசைக்கும் பல டிக்கெட் என்று வாங்கி இருக்கிறார்களாம் அவர்கள் திடீரென்று அவர்கள் சிலர் அல்லது ஒருவர் ஒரு லட்சாதிபதியாகி விட்டால், அந்த லட்சாதிபதியின் எதிர்காலத் திட்டம் என்ன என்று கேட்டறிய செய்தியாளர்கள் அவரை அணுக அனுமதிப்பார்களோ மாட்டார்களோ!

## காந்தியார் அழுகிறார்!

கோவாவில் காங்கிரஸ் செயற்குழு கூடியது. கோவா, மதுவிலக்குச் சட்டம் செயல்படாத பகுதி. பல மாநிலங்கள் மதுவிலக்குச் சட்டம் சரிவர செயற்படுத்தப்படாதிருப்பதை சுட்டிக்காட்டி, காரசாரமான விவாதம்! குழு கூடியிருந்த கட்டிடத்துக்கு வெளியேகூட கூச்சல் கேட்குமளவுக்கு வாக்குவாதம்! முதல் நாள் முடிவெடுக்க முடியவில்லை. மறுநாள் பொது அரங்கில் வாதிக்கலாம் என்பது முடிவு! மறுநாள் வாதிக்கப்பட்டது! முடிவும் எடுக்கப்பட்டது. இன்னும் ஏழு ஆண்டுகளில் 'முழு மதுவிலக்கு'' மேற்கொள்ளலாம் என்பதாக! காங்கிரஸ் குடியர்கள் அதிகமாகக் குடிக்காமல் மிதமாகக் குடிக்கலாம் என்று அனுமதிப்பதாக! காந்தியார் அழாமல் என்ன செய்வார்! சுசீலாநய்யார் பதவி விலகாமல்தான் இருக்க முடியுமா?

---

கள். இந்தச் சுயநலமிகள் மாணவர்களுடைய சக்தி தங்களுக்கு எதிராகத் திரும்பாமலிருக்கவும் அவர்களைச் சுரண்டிக் கொழுக்கவும் இந்தச் சதித் திட்டத்தை முன்வைக்கின்றார்கள். மாணவர்கள் பெறுகின்ற கல்விக்கே இந்தச் சுரண்டுகின்ற அமைப்பு எதிரிடையாக இருப்பதுடன் அவர்களுடைய வாழ்க்கையையும் இது பலி கொள்வதால் இதை எதிர்த்து சுரண்டுகின்ற அமைப்பையே எதிர்த்து முழுமூச்சுடன் போராட்டத்தில் இறங்கவேண்டும் இது மாணவர்கள் ஒழித்ததால்தான் சோவியத் நாட்டின் அனைத்து முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் வழி பிறந்தது. அதுபோல இந்தியாவிலும் சுரண்டல் ஒழிக்கப்பட்ட பின்னர்தான் எந்தவிதமான மாற்றமும் எல்லா விதமான முன்னேற்றமும் ஏற்பட முடியும். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சுரண்டலை ஒழிப்பது ஒருவருடைய தனிப்பட்ட கடமையல்ல, அது மக்களுடைய மிகப் பெரிய மொத்த கடமையாகும். இந்தப் பெரும் பணியில் தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், கலைஞர்கள், மாணவர்கள் யாவரும் ஈடுபட்டாக வேண்டும். நமது வளர்ச்சிக்குத் தடையாக இருக்கின்ற பெருஞ்சுவர் சுரண்டலும் இதைக் கொண்டிருக்கின்ற சமுதாய அமைப்பும்தான். சுரண்டலென்ற பெருஞ்சுவர் இடிக்கப்படாமல் அதன் எல்லா அடிச்சுவடுகளும் அப்புறப்படுத்தப்படாமல் நாம் எதையும் செய்ய முடியாது. நிச்சயமாக எதையும் செய்ய முடியாது.

ளுடைய மிகமுக்கியமான கடமையாகும்.

அக்டோபர் புரட்சி சுரண்டலை

—மே. து. ரா.

நன்றி: ஜனசக்தி.

# வாழ்த்துரைப்போம்!

மூத்ததமிழ்க் கோத்தெடுத்து அறிஞர் தம்மை
முன்நிறுத்திப் பாபாடி வரவு கூறி
யாத்தகவி கோடானு கோடி! என்றன்
யாப்புமதில் ஒன்ருகும்! தாள்ப ணிந்து
ஏத்துகிறேன் தமிழத்தாய் இந்த நாட்டின்
இசைபரப்ப அண்ணுவை ஈன்ற தாலே!
சாத்திரங்கள் சான்றுக்குத் தேவை யில்லை
சந்தனம்தான் மணக்குமெனச் சாற்று தற்கே!

நோயொருநாள் நோய்பட்டுப் போகு மென்றே
நொந்தவர்கள் பலகோடி; நோய்வாய்ப் பட்டு
"போய்வருவார் அமெரிக்கா அண்ணு" என்றே
"பொக்கென்று" ஒருசேதி கேட்ட போதில்!
தாயழுதாள்! தமிழகத்துச் சேய்அழு தான்!
தக்கவர்கள் தாமழுதார்! இன்னுங் கூட
வாயுணவை மறுத்துசெவி உணவுக் காக
வருந்திக்கில் விழிவைத்தோர் அழுதே தீர்த்தார்!

முதலமைச்ச ராம்அண்ணு நாட்டுக் குத்தான்!
முன்பிறந்த அண்ணனன்ருே எங்கட் கெல்லாம்
முதலிழந்த வணிகர்போல் அன்ருே நாடு
மூச்சிழந்து பேச்சிழந்து முடங்கக் கண்டோம்!
இதயங்கள் மகிழ்கின்ற தின்று, அண்ணு
எங்களுளம் நீவிவிட வந்தா ரென்றே!
உதயத்தின் கதிரோனே வாழ்த்து ரைத்தே
உள்ளத்தின் கள்ளநிலை ஒழிப்போம் வாரீர்!

அறிவுக்கும் திறனுக்கும் ஆற்ற லுக்கும்
அன்புக்கும் பண்புக்கும் அஞ்சா மைக்கும்
செறிவார்ந்த பேச்சுக்கும் செந்தண் மைக்கும்
செருபகைமை செற்றறுக்கும் சிந்த னைக்கும்
ஒருஉருவம் பேரறிஞர் அண்ணு வென்றே
உலகமெலாம் ஒருமித்து உரைத்தல் கேட்டோம்!
திருஉருவை வாழ்கவென வாழ்த்தும் போதில்
திருந்தாத நெஞ்சமெலாம் திருந்து மன்ருே!



**திருவாரூர் முத்துராமன்**

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்–3
[illegible]